Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை (08-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:315







களுத்துறைச் சிறைச்சாலையில் தொடர்ச்சியாக நீராகாரம் இன்றி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கைதிகள் சோர்ந்து படுத்திருப்பதையும் சிறைச்சாலைக் கட்டடக் கூரையின்மேல் ஏறிநின்றவாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் சிலரையும் அமைச்சர்களான மகேஸ்வரன், ராஜித சேனாரத்ன ஆகியோர் உண்ணாவிரதிகளுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

### அமைச்சர்கள் ராஜித, மகேஸ்வரன் நடத்திய பேச்சு தோல்வி

# விடுதலை அல்லது வீரமரணம்

# களுத்துறை கைதிகள் உறுதி!

## மிலிந்த மொறகொடவை இன்று சிறைக்கு அனுப்ப பிரதமர் முடிவு

கொழும்பு,ஒக்ரோபர்8

'விடுதலை அல்லது வீரமரணம்' - இப்படியான நிலைப்பாட்டில் மிகுந்த உறுதியுடன் இருக்கின்றார்கள் களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க்கைதிகள்.

களுத்துறையில் நேற்று ஏழாவது நாளாக - சாகும் வரையான - உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இந்தக் கைதிகளை, அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, தி.மகேஸ்வரன் ஆகியோர் நேற்று நேரில் சென்று சந்தித்தனர். அவர்களின் உண்ணாவிரதத்தை கைவிடச்செய்வதற்கு அமைச்சர்கள் இருவரும் நேற்று மேற்கொண்ட பகீரதப்பிரயத்தனம் கைதிகளின் மிக உறுதியான நிலைப்பாடு காரணமாக பயனளிக்காமல் போயிற்று.

இந்தக் கைதிகளின் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியாக அவர்களுடன் நேரில் பேச்சு நடத்துவதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொடவை இன்று களுத்துறைக்கு அனுப்புவதற்கு பிரதமர் ரணில் முடிவு செய்திருக்கின்றார்.

களுத்துறைக் கைதிகள் நேற்று ஏழாவது நாளாகவும் மட்டக்களப்பு கைதிகள் நான்காவது நாளாகவும் அநுராதபுரம் கைதிகள் ஆறாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்தனர்.

இந்த நிலையில் அமைச்சர் மகேஸ்வரன் நேற்று களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்றார். அமைச்சர் ராஜித சேனாரத்னவும் உடன் சென்றார்.

உண்ணாவிரதக் கைதிகளைச் சந்தித்து அமைச்சர் மகேஸ்வரன் பேச்சு நடத்தினார். உண்ணாவிரதத்தை அவர் கைவிட கோரிக்கை விடுத்தார்.

நேற்று நண்பகல் ஒருமணிமுதல் மாலை 4 மணிவரை அமைச்சர்கள் இருவரும் நடத்திய பேச்சுக்கள் பயன் தரவில்லை.

இதனையடுத்து அமைச்சர் மகேஸ்வரன் அலரிமாளிகைக்குச் சென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க்கைதிகளின் நிலைப்பாட்டை அவர் பிரதமருக்கு தெளிவுபடுத்தினார்.

இதனையடுத்து அமைச்சர் மிலிந்த மொறகொடவை இன்று களுத்துறைச் சிறைச்சாலைக்கு நேரடியாக அனுப்பி கைதிகளுடன் பேச்சு நடத்துவதற்கு பிரதமர் இணங்கியதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (ம)

## கைதிகள் விவகாரம் இன்று நாடாளுமன்றில்

### தமிழ் எம்.பிக்கள் முஸ்தீபு

கொழும்பு,ஒக்.8

உண்ணாநோன்பிருக்கும் கைதிகளின் விடயத்தை தேசிய முக்கியத்துவம்வாய்ந்த விடயமாகக் குறிப்பிட்டு அது குறித்து இன்று நாடாளுமன்றத்தில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு குரல் எழுப்பவிருக்கின்றது.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு குரல் எழுப்பும் இந்த விடயத்துக்கு நாடாளுமன்றத்தில் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் இன்று நாடாளுமன்றத்திலிருந்து தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வெளிநடப்புச் செய்வர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்ற போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு மற்றும் பல்வேறு மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கூட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மணல் திட்டியில் தவித்த பன்னிரு அகதிகள் மீட்பு

மன்னார்,ஒக்.8

மன்னார் கடலின் மணல் திட்டியில் தவித்துக் கொண்டிருந்த பன்னிரு தமிழ் அகதிகளை ஸ்ரீலங்கா படையினர் காப்பாற்றியுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த சனிக்கிழமை இந்த 12 அகதிகளும் இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டனர். இவர்களை ஏற்றி வந்த இந்தியப் படகோட்டிகள் அவர்களை மணல் திட்டியில் இறக்கிவிட்டு திரும்பிச் சென்று விட்டனர். மணல் திட்டில் தவித்துக்கொண்டிருந்த இவர்களை அவ்வழியாக ரோந்து சென்ற கடற்படையினர் காப்பாற்றினர். பின்னர் 12 அகதிகளும் தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றையதினம் இந்த 12 பேரையும் தலைமன்னார் பொலீஸார் மன்னார் மாவட்ட நீதிவான் எம்.பி.மொஹி

(14ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்வாதிகளை நம்பத் தயாரில்லை வாக்குறுதிகளைச் செயலில் காட்டுங்கள்

### அமைச்சர் மகேஸ்வரனிடம் களுத்துறைக் கைதிகள் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.8

"அரசியல்வாதிகளை இனியும் நாம் நம்பத் தயாரில்லை. எனவே, வெறும் வாக்குறுதிகளைத் தருவதை விட்டு விடயத்தைச் செயலில் காட்டுங்கள்".

- இவ்வாறு திட்டவட்டமாகக் கூறுகிறார்கள் களுத்துறைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க் கைதிகள்.

நேற்று தம்மைச் சந்திக்க வந்த அமைச்சர்கள் தி.மகேஸ்வரன், ராஜித சேனாரத்ன ஆகியோரிடமே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

"விடுதலை அல்லது வீரமரணம்; நாம் சிறைச்சாலையில் இருந்து பிரேதமாக வெளியே சென்றாலும் அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகளுக்கு மசியமாட்டோம்." - என்றும் அவர்கள் உறுதியுடன் கூறினார்கள்.

களுத்துறை சிறைச்சாலையில் 139 தமிழ்க்கைதிகள் கடந்த 7 தினங்களாக உண்ணாநோன்பிருந்து வருகின்றனர். இவர்களுள் ஏழு பேர் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சிறைச்சாலை கூரை மீது உண்ணாநோன்பிருக்கின்றனர்.

உண்ணாவிரதமிருக்கும் கைதிகளுள் 15 பேர் மயக்கமடைந்துள்ளனர். மூவர் இரத்தவாந்தி எடுத்துள்ளனர் என்று சக கைதிகள் கூறினர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலை. மாணவர் விரிவுரைகளை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.8

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க்கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இன்று ஈடுபடவுள்ளனர்.

அனைத்துப்பீட மாணவர்களும் இன்று முற்பகல் 10 மணிக்கு வகுப்புகளைப் பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபடுவர் என மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-3-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது இன ஒடுக்குமுறை

# கைதிகள் விடுதலையை வலியுறுத்தி

# குடாநாட்டில் நாளை போராட்டங்கள்!

## மனிதநேய அமைப்புகளின் ஒன்றிய ஏற்பாட்டில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.8

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகள் மேற்கொண்டுவரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் -

தமிழ்க்கைதிகளை உடன் விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தியும் -

குடாநாட்டில் நாளை பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா அரசின் சிறைகள் பலவற்றில் விசாரணைகள் எதுவுமின்றியும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாமலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விரக்தியின் விளிம்பில் நிற்கின்றனர். தாம் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து களுத்துறையிலும் வேறு சிறைகளிலும் உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களை அரசு தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது பாரிய மனித உரிமை மீறலாகும். ஒரு விதத்தில் அது இன ஒடுக்குமுறையுமாகும். சட்டநிலை எவ்வாறாயினும் அவற்றைப் புறந்தள்ளி கைதிகள் அனைவரையும் உடன் விடுதலை செய்யவேண்டும் என்று குடாநாட்டு மக்கள் அனைவரும் வலியுறுத்தி நிற்கிறோம்.

இதனை வெளிக்காட்டும் பொருட்டு கீழ்வரும் போராட்டங்கள் நாளை மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

★ குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் காலைப் பிரார்த்தனையின்போது அதிபர் அல்லது ஆசிரியர்கள் மனித உரிமை மீறல்கள் பற்றியும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

★ மதியம் 12 மணிமுதல் ஒரு மணிவரையும் சகல திணைக்களங்கள், பாடசாலைகள் கூட்டுறவுத்துறை, வங்கிகள், மகளிர் அமைப்புக்கள், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வர்த்தக, பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோர் அனைவரும் தமது பணிகளை இடைநிறுத்தி அலுவலகம் முன் தமிழ்க்கைதிகளின் விடுதலை தொடர்பாக அமைதிப் போராட்டத்தில் ஈடுபடுதல்

★ மதியம் 12 மணிமுதல் 2 மணி வரையும் மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தினதும் முக்கிய பிரதிநிதிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் முன்பாக அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டு கைதிகளின் விடுதலை தொடர்பாக மகஜர் கையளித்தல்.

இந்தப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக மேற்கொள்ளுமாறு மேற்குறிப்பிட்ட தரப்பினர் அனைவருக்கும் யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது - என்றுள்ளது. (ம-10-5)

## வெகுஜனப் போராட்டங்கள் நடத்துவதற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஒக்.8

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ்க்கைதிகளையும் விடுதலை செய்யக் கோரி நாடளாவிய வெகுஜன போராட்டங்களை நடத்துவதற்கு யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தயாராகி வருகிறது.

தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்து இவ்வொன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அமைதியையும், நீதியையும் பெற்றுத்தருமென புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்டபோதிலும் தமிழ்மக்கள் என்றவகையில் தமிழ்க் கைதிகள் தொடர்ந்தும் அளப்பரிய துன்பத்திற்கு உள்ளாகி வருகிறார்கள். இதன் அடிப்படைகள் குறித்து மக்கள் மத்தியில் ஏமாற்றமே நிலவுகின்றது. அரை நூற்றாண்டு காலமாக நீடித்த அரச ஒடுக்குமுறையின் தனித்துவமான வடிவமே இது என எண்ணத்தூண்டுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் காலாவதியாகிப்போயுள்ள இக்காலகட்டத்தில் தமிழ்மக்களைத் தொடர்ந்தும் சிறைக்கூடங்களில் தடுத்து வைப்பதும், சித்திரவதை செய்வதும் அரசின் பாரபட்சமான போக்கை வெளிப்படுத்துகின்றது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் நாளை புதன்கிழமைக்கு முன்னர் விடுதலை செய்யப்படவில்லையானால் நாடளாவிய ரீதியில் வெகுஜனப் போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டது. (ம-ரி)

## கண்காணிப்புக் குழு அலுவலகம் முன் நேற்று 15 நிமிட நேர மறியல்

### ஐக்கிய சோஷலிசக் கட்சி ஏற்பாட்டில் நடந்தது

யாழ்ப்பாணம்,ஒக்.8

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் கைதிகளை விடுவிக்கக்கோரி நேற்று மாலை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு முன்னால் மறியற்போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் ஏற்பாட்டில் இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது. சுமார் 15நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்த அடையாள மறியல் போரில் சுமார் 25பேர் கலந்து கொண்டனர்.

மாலை 5.15மணியளவில் கண்காணிப்புக்குழு அலுவலகதின் பிரதான வாயிலில் ஒன்றுகூடிய இவர்கள் அமைதியான முறையில் தமது போராட்டத்தை நடத்தினர்.

15நிமிட நேரம் அலுவலகத்திலிருந்து எவரையும் வெளியே செல்லவிடாது மறியலில் ஈடுபட்டனர்.

பின்னர், களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு உரிய தரப்பினருடன் பேசி நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்றினையும் கண்காணிப்பு குழுப்பிரதிநிதிகளிடம் கையளித்தனர். (ம-4-5)

### இலங்கையின் புனரமைப்புக்குத் தேவையான

## நிதி உதவிகள் பற்றி ஆராய சர்வதேச மட்டத்தில் இரு மாநாடு

இலங்கையின் புனரமைப்புக்குத் தேவையான நிதி உதவிகள் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச மட்டத்திலான இரண்டு மாநாடுகள் நடத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் உடனடித் தேவைகள் குறித்து ஆராய்வதற்கான மாநாடு நோர்வேயின் ஏற்பாட்டில் அடுத்தமாதம் நடைபெறவுள்ளதாகவும் -

நீண்டகாலப் புனரமைப்புக்கு உதவி வழங்குவது குறித்து ஆராய்வதற்கான மாநாடு அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவிருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இருமாநாடுகளிலும் இலங்கையின் முக்கிய அமைச்சர்கள கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## திறந்த பல்கலை பதிவுகள் வியாழனன்று

யாழ்ப்பாணம்,ஒக்.8

திறந்த பல்கலைக்கழக யாழ்பிராந்திய நிலைத்தில் விஞ்ஞானமாணி, விஞ்ஞான கல்விமாணி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பதிவுகள் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளன.

யாழ்.பிராந்திய அலுவலக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் திறந்த பல்கலைக்கழகத்தின் தலைமை அலுவலக உயர் அதிகாரிகள், பதிவாளர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொள்வர்.

இக்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த அனைவரையும் மேற்குறிப்பிட்ட தினத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் -

தற்போது திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் கற்கை நெறிகளைப் பின்பற்றும் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் - பிராந்திய இணைப்பாளர் ச.ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார். (எ-5)

## பல்கலைக்கழக மாணவர் பொதுக்கூட்டம்

யாழ்பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச செயலாளர் எம்.சிவகுமரன் கேட்டுள்ளார். (எ-5)

# அரசியல்வாதிகளை நம்பத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பேருக்கு சிறைச்சாலை நிர்வாகம் பலவந்தமாக 'சேலைன்' ஏற்றியுள்ளது.

"எந்த ஓர் அரசியல்வாதியையும் நாம் சந்திக்கத் தயாரில்லை. அதே வேளை, அரசின் சார்பில் அமைச்சர் மிலிந்த மொறகொட எங்களுடன் பேச்சு நடத்த வரவேண்டும்." - என்ற கோரிக்கையை கைதிகள் முன்வைத்திருந்தது தெரிந்ததே.

ஆனால், அமைச்சர்கள் மகேஸ்வரனும் ராஜித சேனரத்னவும் நேற்று மிகவும் சாதுரியமான முறையில் தமிழ்க் கைதிகளை அணுகினர்.

**அமைச்சர்கள் கருத்து**

"அரசியல்வாதிகள் என்றோ, இல்லை அமைச்சர்கள் என்றோ நாம் இங்கு வரவில்லை. உங்களுடைய உண்மையான நிலையை அறிந்து உங்களுடைய நிலைப்பாட்டை வெளி உலகிற்கு அறிவிப்பதற்காக மனிதநேய அடிப்படையில் வந்துள்ளோம்." என்றனர் அமைச்சர்கள்.

"உங்களுடைய கோரிக்கையைச் செய்தித்தாள்கள் மூலம் அறிந்து, நான் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் பேசினேன். உங்களைப்பார்க்க என்னோடு வரும்படி அழைத்தேன். ஆனால், அவர் அதில் அக்கறை காட்டவில்லை. திருகோணமலையில் கைதுசெய்யப்பட்டிருக்கும் ஏழு படையினரை விடுதலை செய்வதற்காக அங்கு ஓடோடிச் சென்ற அமைச்சர் மொறகொட, இங்கு ஜீவமரணப் போராட்டம் நடத்தும் தமிழ்க்கைதிகளான உங்களைப்பற்றி ஆர்வம் காட்டாதது எனக்கு வேதனை அளிக்கின்றது" - என அமைச்சர் மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

"எனது உடன் பிறப்புக்கள் உயிர்த்தியாகம் செய்யத்தயாராக இருக்கும் போது அவர்களைப் போய்ப் பார்க்கவேண்டும் உங்களைச் சந்திக்க வேண்டும். உண்மைநிலையை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துதலால் இங்கு வந்தேன்.

"நான் உங்களுடைய போராட்டத்தை கைவிடும்படி கூறமாட்டேன். உங்கள் போராட்டத்தின் வெற்றியை அனுபவிக்க நீங்கள் உயிருடன் இருக்கவேண்டும் என்றே கோருகிறேன். உங்கள் உயிருக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது. எனவே, நீர் ஆகாரம் மட்டுமாவது அருந்தி உங்கள் போராட்டத்தை தொடருங்கள்" - என்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

அமைச்சரின் இந்தக் கோரிக்கையை நிராகரித்த கைதிகள் நாளைமுதல் கட்டாய வைத்திய சிகிச்சைகளையும் நிராகரிக்கப்போவதாக திட்டவட்டமாக் கூறினார்.

**ராஜித கருத்து**

அமைச்சர் ராஜித சேனாரத்ன கைதிகளிடம் பேசும்போது -

"உங்களுடைய போராட்டம் நியாயமானது; 'புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து உங்களை விடுதலை செய்வது ஒன்றும் பெரிய விடயமல்ல.

"ஆனால், உங்களில் சுமார் 20 பேர் தண்டனை விதிக்கப்பட்டிருப்பவர்கள். பலர்மீது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. மிகச்சிலரே காரணம் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

"என்றாலும் தண்டனை விதிக்கப்பட்டவர்களைத்தவிர ஏனைய கைதிகள் தொடர்பாக சட்டமா அதிபருடன் பேசி விடுதலை செய்வதற்கு ஆவன செய்வோம். தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடமே உள்ளது.

"எனவே, இவர்கள் விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடமும் பேசி ஆவன செய்வோம். அதுவும் கைகூடாவிட்டால் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசி ஒரு தீர்மானம் எடுப்போம். இதற்கு எங்களுக்கு அவகாசம் தரவேண்டும்." - என கேட்டுக் கொண்டார்.

**கைதிகள் மறுப்பு**

இதைக்கைதிகள் முற்றாக நிராகரித்து விட்டனர்.

"பாதுகாப்பு அமைச்சர், பிரதி சட்டமா அதிபர் மற்றும் அமைச்சர்களான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, சந்திரசேகரன், மகேஸ்வரன் ஆகியோர் வந்து பார்த்தனர்.

"ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட - வழக்குகள் யாவும் வாபஸ் பெறப்படும் என்றனர். அதன்பின் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை மட்டும் வைத்து மயில்வாகனம் என்ற இளைஞனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

"அமைச்சர்களின் வாக்குறுதிகளை எப்படி நம்புவது? அமைச்சர் சந்திரசேகரன் வந்து பிரதமர் வெளிநாட்டில் இருக்கின்றார். மூன்று வார கால அவகாசம் தாருங்கள். உங்கள் விடுதலைபற்றி முடிவு எடுப்பேன் என்றார். உங்களுக்கு விடுதலை கிடைக்காவிட்டால் மலையகம் கொந்தளிக்கும்; நானும் போராட்டம் நடத்துவேன் என்றார். ஆனால் இன்றுவரை இந்தப்பக்கமே வரவில்லை.

"ஆறுமுகம் தொண்டமான் தன்னிடம் வந்தால் தான் தீர்வு காண்பேன் என வானொலிக்கு பேட்டி அளிக்கின்றார்.

"இவர்கள் எம்மை வைத்து அரசியல் விளம்பரம் தேடவே முனைகின்றனர். எங்கள் உயிர்களுடன் விளையாடுகின்றனர்.

"எனவே எந்தவோர் அரசியல்வாதிகளையும் நாம் இனிமேல் நம்பத்தயாராக இல்லை" - என்று கைதிகள் ஒரே குரலில் கூறிவிட்டனர்.

கடைசியாக, "உங்களுடைய வழக்குகளை [illegible] பிரதேசங்களுக்கே மாற்றுகின்றோம். அதற்காவது அவகாசம் தாருங்கள்!" - என்று அமைச்சர்கள் [illegible].

"எதுவுமே [illegible]. எந்தவிதமான நிபந்தனையும் இன்றி தமிழ்க் கைதிகள் [illegible] விடுதலை செய்யவேண்டும்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் என்று நேரடியாக இனங்காணப்பட்டவர்களை விடுதலை செய்ய சட்டத்தை வளைக்க முடியுமானால் அப்பாவிகளான எங்களை விடுவிக்க சட்டச் சிக்கல் என்று கூறி பம்மாத்து காட்டக்கூடாது.

"பல உயிர்களைக் கொன்று குவித்த ஜே.வி.பியினரை ஒரே இரவில் விடுதலை செய்ய முடியுமென்றால், சமாதான ஒப்பந்தத்தின் பின் எங்களை ஏன் விடுதலை செய்யமுடியாது?

"வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த தமிழ் பேசும் எம்.பிக்கள் 19ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு அளிப்பதற்கு எமது விடுதலையை முன் நிபந்தனையாக ஏன் வைக்கக்கூடாது?

"எமது விடுதலைக்காக - மனிதாபிமான அடிப்படையில் - வடக்கு, கிழக்கு, மலையகம் எங்கும் வெகுஜனப் போராட்டங்களை நடத்த வேண்டும். இத்தகைய போராட்டங்களில் ஈ.பி.டி.பி., புளொட் அமைப்புக்களும் தமிழ் உணர்வுடன் பங்கு கொள்ளவேண்டும்.

"எமது நிலையை அறிய இங்கு வந்த அமைச்சர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். ஆனால் எங்களுடைய போராட்டத்தை கைவிடமாட்டோம்.

"தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக உயிரிழக்கும் எங்கள் உடல்களை வைத்தியக் கல்லூரிக்கு சமர்ப்பிக்கும்படி வேண்டுகிறோம்.

"எங்களுடைய மரணங்கள் சமாதானப் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்ககூடாது. அரசும் புலிகளும் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்." என்று உருக்கமாக தமது கருத்துக்களை முன்வைத்தனர் கைதிகள். (ம-4-ரி)

# இஸ்ரேலியப் படையின் தாக்குதலில் காஸாவில் 12 பலஸ்தீனர்கள் பலி!

## காயப்பட்டவர்கள் சிகிச்சைபெற்ற ஆஸ்பத்திரி மீதும் ஷெல் வீச்சு!

லண்டன்,ஒக்ரோபர்8

**காஸா நிலப்பரப்பில் நேற்றுக்காலை இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 80பேர் வரை காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பலஸ்தீன மருத்துவமனையும் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.**

காஸா பிரதேசத்தில் உள்ள பலஸ்தீன நகரான கான்யூனுஸ்"க்குள் நேற்றுக் காலை 40 டாங்கிகள் சகிதம் இஸ்ரேலிய இராணுவம் நுழைந்தது. அதற்குத் துணையாக இஸ்ரேலிய 'அபாசி' ரக ஹெலிகொப்டர்களும் சென்றன.

நகருக்குள் மட்டுமன்றி அடுத்திருந்த பலஸ்தீன அகதி முகாமையும் இஸ்ரேலிய படையினர் முற்றுகையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய டாங்கிகளும், ஹெலிகளும் சரமாரியாகக் குண்டுத் தாக்குதல்களை ஆரம்பித்தன.

இஸ்ரேலிய டாங்கிகள் பலஸ்தீனர்களின் வீடுகளை மோதிச் சேதமாக்கியதாகவும்-

இதனால் வீடுகளில் இருந்து வெளியேறிய பலஸ்தீனர்கள் ஓர் இடத்தில் கூட்டமாக நின்றதாகவும்-

இஸ்ரேலிய ஹெலி ஒன்று அக்கூட்டத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் 12 பலஸ்தீனர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் 80 பேர் வரை காயமடைந்தனர். இவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவற்றில் ஒரு மருத்துவமனை மீது இஸ்ரேலிய இராணுவம் ஏவிய ஷெல் வீழ்ந்து வெடித்ததில் 8 பேர் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இப்பகுதியில் பலஸ்தீனத் தீவிரவாதிகளின் ஆயுதத் தொழிற்சாலையும், வெடிபொருள் களஞ்சியமும் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே தீவிரவாதிகளின் நிலைகள் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இத்தாக்குதல்களுக்குப் பழிவாங்குவதாக ஹமாஸ் இயக்கம் சூளுரைத்துள்ளது. அப்பாவிப் பலஸ்தீனப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு, இஸ்ரேலியப் பொதுமக்களைக் கொல்வதே தண்டனை என்று அந்த இயக்கம் தெரிவித்தது.

(ஒ)



கான்ஜுனுஸில் நேற்று இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பலஸ்தீனர்களில் ஒருவரது இறுதி ஊர்வலத்தையும் மசூதியில் மற்றொருவரின் சடலம் இறுதிச் சடங்குகளுக்காக வைக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

## முத்தமிட்ட நடிகையை கைதுசெய்ய உத்தரவு

தெஹ்ரான்,ஒக்.8

ஈரானில் திரைப்பட இயக்குநர் ஒருவருக்குப் பகிரங்கமாக முத்தம் கொடுத்த நடிகை ஒருவரைக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஈரானில் இஸ்லாமிய விதிகள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன. அங்கு ஆணும் பெண்ணும் பகிரங்கமாகக் கைகுலுக்கிக் கொள்வதற்குக்கூட அனுமதி இல்லை.

மத்திய ஈரானில் உள்ள யாஜட் நகரில் அண்மையில் திரைப்பட விழா ஒன்று நடந்தது. விழாவின் இறுதி நாள் நிகழ்வில் இளம் இயக்குநரான அலி ஜமாலிக்கு பரிசு வழங்கப்பட்டது. 50 வயதான நடிகை கோகர் அவருக்குப் பரிசு வழங்கினார். அப்போது அந்த இளம் இயக்குநருக்குத் தனது வாழ்த்தைத் தெரிவிக்கும் முகமாக அவரது கன்னத்தில் முத்தமிட்டார்.

இது இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. அவர்கள் கோகருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினார்கள். நடிகையைக் கண்டித்து நகரில் பெரும் ஆர்ப்பாட்டமும் நடத்தினார்கள்.

இதைத் தொடர்ந்து நடிகையையும் இயக்குநரையும் கைதுசெய்ய இஸ்லாமிய நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது. நிகழ்ச்சியை நடத்தியவரும் கைதுசெய்யப்பட்டார்.

இயக்குநர் ஜமானி நடிகை கோகரின் கணவருடைய முன்னாள் மாணவர். அதனாலேயே அவர் இயக்குநரை முத்தமிட்டார். தாய்மை உணர்வுடனேயே அவர் இந்தக் காரியத்தைச் செய்துள்ளார் என்று ஈரான் கலாசார அமைச்சர் தெரிவித்தார்.

## 8நாள்களுக்குள் தூதரை அனுப்ப கட்டாயப்படுத்துகின்றார் வீரப்பன்

பெங்களூர்,ஒக்.8

தன்னிடம் பணயக் கைதியாக உள்ள நாகப்பாவை விடுவிப்பது தொடர்பாக தன்னுடன் பேசுவதற்கு கொளத்தூர் மணியை 8 நாள்களுக்குள் தூதராக அனுப்பவேண்டும் என்று சந்தன மரக் கடத்தல் வீரப்பன் அனுப்பிய மூன்றாவது ஒலிநாடாவில் கோரியுள்ளார்.

இந்த ஒலிநாடா சாம்ராஜ்நகர் மாவட்டம் காமகெரேயால் உள்ள நாகப்பா வீட்டுத் தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை கண்டெடுக்கப்பட்டது.

இது குறித்து கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் விவாதித்த பின்னரே முடிவு எடுக்கப்படும் என்று கர்நாடக உள்துறை அமைச்சர் மல்லிகார்ஜுன் கார்கே, செய்தியாளர்களிடம் கூறினார்.

கொளத்தூர் மணி தற்போது கர்நாடக மாநிலம் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## வீட்டுக் குளியலறையில் 'கமரா'; உரிமையாளருக்கு ஒருவருட சிறை!

சிங்கப்பூர்,ஒக்.8

பணிப்பெண்ணை நிர்வாணப் படம் எடுத்த சிங்கப்பூர் வாசியான டூடியன் கோவ் என்பவருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

25 வயதான அந்தப் பணிப்பெண் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். தான் தங்கியிருந்த இடத்தின் குளியலறையில் இரு வீடியோ கமராக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அவர் கண்டார். இதையடுத்து பொலீஸில் அவர் முறையிட்டார்.

இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் டூடியன் கோவிடம் பொலீஸார் உடனடி விசாரணை நடத்தினர். அப்போது உண்மை வெளிப்பட்டது. ஆடையின்றி பணிப்பெண் குளிக்கும் போது அக்காட்சியை வீடியோப்படம் எடுத்ததை வீட்டு உரிமையாளர் ஒப்புக்கொண்டார். சிங்கப்பூர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து டூடியன் கோவுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதித்தது. அத்துடன் ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது.

பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இலங்கை, மியான்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் சிங்கப்பூரில் பணிப் பெண்களாக வேலை பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## கட்டாய மத மாற்றத்துக்கு தமிழகத்தில் தடைச்சட்டம்

சென்னை,ஒக்.8

கட்டாய மதமாற்றத்தை தடைசெய்யும் அவசர சட்டம் ஒன்றை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. கோயிலுக்குள் நுழைய முடியாமை உட்பட சாதிக்கொடுமைகளால் மிக மோசமாகப் பாதிக்கப்படும் தாழ்த்தப்பட்ட தலித் மக்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றாக இந்து மதத்திலிருந்து வேறு மதங்களுக்கு மாறும் சம்பவங்கள் இந்தியாவில் அடிக்கடி இடம்பெறும் நிலையில், தமிழக அரசு அவசர சட்டம் ஒன்றின் மூலம் கட்டாய மத மாற்றத்தைத் தடைசெய்துள்ளது.

சமீபத்தில் கூட தமிழகத்தில் தலித் கிராமம் ஒன்று ஒட்டு மொத்தமாக இந்து மதத்தில் இருந்து இஸ்லாமிய மதத்துக்கு மாறியிருந்தது.

இந்த நிலையிலேயே கட்டாய மதமாற்றத்துக்கு எதிராக புதிய சட்டத்தை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

காஞ்சி சங்கராச்சார்யார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதா கட்சி மற்றும் தீவிர இந்துத்துவ அமைப்புக்கள் இந்தச் சட்டத்தை வரவேற்றுள்ளன.

இதே சமயம் தி.மு.க. உட்பட எதிர்க்கட்சிகளும் பிற மத அமைப்புக்களும் இச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

எவராவது தாமாக விரும்பி மதம் மாறினால் கூட அவர்களை கட்டாயப்படுத்தி மதம் மாறியதாகக் குற்றம் சாட்டமுடியுமென்றும்-

'பொடா' சட்டத்தை தமிழக அரசு அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதுபோல், இந்தச் சட்டத்தையும் தவறான வழிகளில் பயன்படுத்தமுடியும் என்றும்-

இதனை எதிர்ப்பவர்கள் கூறி வருகின்றனர்.

இதேசமயம் பாரதீய ஜனதா கட்சியுடன் நெருங்க விரும்பும் தமிழக முதல்வர் ஜெயலலிதா, அந்த இந்துத்துவக் கட்சியைத் திருப்திப்படுத்தவே இச்சட்டத்தை கொண்டு வந்துள்ளதாகவும் -

மதம் தொடர்பான தனிமனித உரிமையை இந்தச் சட்டம் மிக மோசமாகப் பாதிப்பதாகவும் -

விமர்சனங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பின்லேடன் உயிருடன் இருப்பதற்கு தொலைபேசிப் பேச்சே ஆதாரம்!

### அமெரிக்க உளவு நிறுவனம் கூறுகிறது

லண்டன்,ஒக்.8

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருப்பது உறுதியாகியுள்ளதாகவும் - தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஓமர் தொலைபேசியில் பேசியதை ஒற்றுக்கேட்ட போது இது தெரியவந்ததாகவும் -

அமெரிக்க உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருக்கிறாரா? அல்லது தோரா போரா குகைப் பகுதியில் அவர் ஒளிந்து இருந்தபோது அங்கு அமெரிக்காவின் குண்டு வீச்சில் பலியாகிவிட்டாரா என்பது தெளிவாகாமல் இருந்தது. ஒருசிலர் அவர் அமெரிக்க தாக்குதலில் பலியாகியிருக்கலாம் என்று கூறினர். வேறுசிலர் அவர் பாகிஸ்தான் எல்லையில் பதுங்கி இருப்பதாகக் கூறினர்.

எதுவுமே உறுதியாகத் தெரியாமல் இருந்தது. இந்த நிலையில், அவர் உயிருடன் இருப்பது, இப்போது ஆதாரப்பூர்வமாகத் தெரியவந்ததாகக் கூறப்படுகிறது. அமெரிக்க உளவு நிறுவனம் செயற்கைக்கோள் மூலம் செயற்படும் ஒரு தொலைபேசிப் பேச்சை இடைமறித்து ஒற்றுக்கேட்டது. அதில் பேசிய தலிபான் இயக்கத்தலைவர் முல்லா ஓமர் அவர், தன் சிரேஷ்ட தளபதி ஒருவருடன் பேசினார்.

செயற்கைக்கோள் தொலைபேசி மூலம் முல்லா ஓமரும் தளபதியும் பேசினார்கள். அப்போது ஷேக் தன் வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்து இருப்பதாக முல்லா ஓமர் தளபதியிடம் கூறினார். முல்லா ஓமர் எப்போதுமே பின்லேடனை ஷேக் என்றுதான் அழைப்பார். இதன் மூலம் பின்லேடன் உயிருடன் இருப்பது உறுதியாகியுள்ளது. இவ்வாறு உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பின்லேடன் எங்கே இருக்கிறார் என்பதுதான் தெரியவில்லை. ஆப்கானில் உள்ள பக்தியா மாகாணத்துக்கும் பாகிஸ்தானில் உள்ள வசீரிஸ்தான் என்ற இடத்துக்கும் இடையே பின்லேடன் நடமாடலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

(ஒ)

## பிராமணர் அல்லாதோரும் கோயிலில் பூசகராகலாம்

### இந்திய நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி,ஒக்.8

'பிராமணர் அல்லாதவரை ஆலயத்தில் பூசகராக நியமித்ததை அவரது குலத்தை மட்டும் காரணம் காட்டி தடைசெய்யமுடியாது.'

- இவ்வாறு இந்திய உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கேரள மாநிலத்தில் உள்ள அம்மன் ஆலயம் ஒன்றின் நிர்வாகம், பிராமணர் அல்லாத ஒருவரை பூசகராக நியமித்திருந்தது. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட ஆலயத்தில் காலம் காலமாக பிராமணர்களே பூசகர்களாக இருந்து வருவதாகவும் -

இந்துமத மரபின்படி பிராமணர்களே ஆலயக் கர்ப்பக்கிரஹத்தில் உள்ள விக்கிரகங்களை தொட்டுப் பூசைசெய்யமுடியும் என்றும் -

ஆகவே, பிராமணர் அல்லாதவரை பூசகராக நியமித்ததை தடைசெய்யும்படியும் -

மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள்,

பூசை செய்வதற்கான நியம அனுஷ்டானங்களை கைக்கொண்டு அதற்குரிய தகுதியைப் பெற்றிருந்தால், எவரும், எந்த ஆலயத்திலும் பூசகராக நியமிக்கப்படலாம் என்றும் -

பழைமை, மரபு, குலம் போன்றவற்றை காரணம் காட்டி அதனைத் தடுக்க முடியாது என்றும் -

தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

(ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3அடி அகலமும் 4அடி உயரமுள்ள இந்தியன் திண்டுக்கல் இரும்புப் பெட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2222863.(9167)

நல்ல நிலையிலுள்ள (L.M.L. செலைக்ரர்) இரண்டு மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.10,கில்னர் லேன், கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். (9166)

புத்தம் புதிய 12K.V. செல்ஸ் ராட் டீசல் ஜெனறேற்றர் உடன் விற்பனைக்கு உண்டு (கோயில் தேவைக்கு உகந்தது. 100இற்கு மேற்பட்ட ரியூப் லைட்டுகள் பாவிக்க முடியும்). தொடர்பு: No.20, சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (9157)

தொலைத்தொடர்பு நிலையத்துக்கு உரிய (2Boothகளும்) முன் கதவுக்குரிய இரண்டு கண்ணாடி பிற்றிங்கும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 498, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P. No. 2918 (9172)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், சுதுமலை வடக்கு சாயி கோயிலுக்கு அருகில் உள்ள 21/4 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது (வீடுகட்ட உகந்தது). தொடர்பு: இ.சிவயோகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (9168)

## எங்கள் நாடு

பரிசு பெற்ற 7 இலங்கை வானொலி நாடகங்கள். எங்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் எழுதப் பயன்படத்தக்க ஒரே ஒரு நூல். அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. (9074)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள தனியார் கம்பனி இயக்குநர் வீட்டில் பணிசெய்வதற்கு பணிப்பெண் தேவை (40 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது). விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: து.செல்லையா, 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (9164)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சைவபோசன, திருவோண நட்சத்திர, மகரராசியில், 1963 இல் பிறந்த, கொழும்பில் B.A. பட்டதாரி ஆசிரியராகவுள்ள மணமகளுக்கு அவரது சகோதரி மணமகனை எதிர்பார்க்கின்றார். ஜாதகம் முழு விவரங்களுடனும் தொடர்புகொள்ளவும்: விளம்பர இல. 1664, மே/பா உதயன். (9142)

## தவறிவிட்டது

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அந்திரேஸ் அல்வினம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை அல்லைப்பிட்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.அல்வினம்மா, அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (9169)

பாலாவி தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் யோகேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.678542075V), விசேட அடையாள அட்டை என்பன யாழ். போதனா வைத்தியசாலைக்கும், பஸ்நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (9165)

## காணவில்லை

மாவெள்ளை நிறமுடைய கன்விப் பசுமாடு 4-10-2002 வெள்ளிக்கிழமை மாலை 3மணியில் இருந்து காணாமல் போய்விட்டது (சிங்கள மகாவித்தியாலய அருகில் மேய்ந்து நின்றது). பின்புறம் வெள்ளை மறு உள்ளது. கண்டவர்கள் ரட்ணா, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (9141)




## நூல் வெளியீடு

நவராத்திரி விரத காலங்களில் பக்தியுடன் பாடிப்பரவ, பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்ட 'சக்தி தோத்திரப் பாமாலை' வெளிவந்துள்ளது. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். விலை 30/- மட்டுமே. (9158)

## செம்பியன்பற்று பாடசாலை மீண்டும் சொந்தஇடத்தில்

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மருதங்கேணிப் பிரதேசத்தில் இப்பாடசாலையுடன் இதுவரை 10 பாடசாலைகள் சொந்த இடங்களில் மீள இயங்க ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே கேவில் அ.த.க.பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி இ.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க.பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, மாமுனை அ.த.க.பாடசாலை ஆகியனவே இவ்வாறு சொந்த இடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன. (எ-182)

# பருத்தித்துறை - மருதங்கேணி வீதியை பாவனைக்கு அனுமதிக்குக!

**கண்காணிப்பு குழுவிடம் மகஜர் சமர்ப்பிப்பு**

வடமராட்சி,ஒக்.8

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியினை போக்குவரத்துக்காகத் திறந்துவிடுவதற்கும் -

நாகர்கோவில் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கும் நடவடிக்கை எடுக்கும்படி வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை மகஜர்மூலம் கேட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி வீதி திறக்கப்படாமையினால் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரு கூறாக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனால், அரச நிர்வாக நடவடிக்கைகளில் தடங்கல்களும், சிரமங்களும் ஏற்பட்டுள்ளன.

சுகாதாரம், கல்வி மற்றும் சேவைகள் அப்பகுதி மக்களுக்கு பூரணமாகக் கிடைப்பதில்லை. நாகர்கோவில் பகுதியில் உள்ள 3 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாமையினால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் யாழ்.அரசாங்க அதிபர், நாகர்கோவில் இராணுவ முகாம் கட்டளைத் தளபதி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-182)

## யா/ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் நாளை (09.10.2002) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை அதிபர் ச.திரவியராசா அவர்களின் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

(C/24112) அதிபர்.

## யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி தரம் 6 அனுமதி - 2003

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அனுமதி நடைபெற இருப்பதால் விண்ணப்பப்படிவங்களை கல்லூரியில் 09-10-2002 தொடக்கம் பெற்று 30-10-2002 ஆந்திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு கோருகின்றோம்.

அதிபர்,
(9173) யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## விண்ணப்பம் கோரல்

வேலணை பெருங்குளம்
முத்துமாரி அம்மன் தேவஸ்தான இராஜகோபுர திருப்பணிச்சபை

சப்ததள இராஜகோபுர அமைப்புக்கு வெள்ளைக்கல் கொண்டு வருவதற்கும் கல்வேலை செய்வதற்கும் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்களின் அளவு, பருமன் மற்றும் ஏனைய விவரங்களை யாழ்ப்பாணம், 177/D, கஸ்தூரியார் வீதி, சிறிகருமாரி நகையகத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித்தினம்: 15-10-2002.

(9170) இராஜகோபுர திருப்பணிச் சபை.



உதயன்

## சட்டத்துறையில் குளறுபடி!

தேர்தல், பொலீஸ், நீதி, பொதுச்சேவை போன்றவற்றின் நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகள் இருக்ககூடாது. அவை சுதந்திரமாக - சுயாதீனமாக - செயற்படவேண்டும். ஆளுங்கட்சியின் ஏவல் அமைப்புகளாக அவை செயற்படும் முறை ஒழிக்கப்படவேண்டும்.

இந்த நன்நோக்கத்தில்தான் 17ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக - அனைத்துக் கட்சிகளினதும் அங்கீகாரத்துடன் - நிறைவேற்றப்பட்டது.

இந்த 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் அரசமைப்புக் கவுன்ஸில் ஒன்றை ஸ்தாபிக்க வழிசெய்தது. அப்படி நியமிக்கப்பட்ட அரசமைப்புக் கவுன்ஸில் மேற்படி சேவைகள் சுதந்திரமாக - சுயாதீனமாக - செயற்படுவதற்குரிய வழிகாட்டல்கள், நியமனங்கள் போன்றவற்றை வழங்கவும் அத்திருத்தம் வழிசெய்தது.

அந்த அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய அரசமைப்புக் கவுன்ஸில் உருவாக்கப்பட்டு அது இப்போது செயற்படத் தொடங்கியுள்ளது.

அரசமைப்புக் கவுன்ஸில் உருவாக்கப்பட்டபோது எடுககப்பட்ட தீர்மானம், அந்த கவுன்ஸிலின் மூத்த உறுப்பினர் ஒருவரால் மீறப்பட்டிருப்பது சட்டத்துறையை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது.

நீதிமன்றங்களில் சட்டத்தரணிகளாகப் பணிபுரிந்து கொண்டிருப்போர் இந்தக் கவுன்ஸிலுக்கு நியமிக்கப்படக்கூடாது என்ற எழுதாத சட்டம் - ஏற்பாடு - கவுன்ஸில் உருவாக்கப்பட்டபோது சகல தரப்பாலும ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிரதமநீதியரசர்முதல் நீதியரசர்கள், சட்டமா அதிபர் போன்றோர்வரை அனைவரினதும் நியமனங்களையும் இந்தக் கவுன்ஸிலே கையாளப்போகின்றது. நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பணிபுரிபவரே நீதியரசரையும் நியமிக்கும் பணியில் சம்பந்தப்படுவது பொருத்தமற்றது என்பது அனைவருமே ஏற்றுக்கொள்ளத்தக்கது.

அந்த அடிப்படையிலேயே நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகப் பணிபுரிபவர்களை அரசமைப்புக் கவுன்ஸிலுக்குத் தெரிவுசெய்யாமல் தவிர்ப்பது என்ற கனவான் ஒப்பந்தம் - எழுதாச்சட்டம் - இயற்றப்பட்டது.

மேற்படி அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு மலையக மக்கள் சார்புப் பிரதிநிதியாக முதலில் பிரேரிக்கப்பட்டவர் மூத்த சட்டத்தரணி ஆர்.இராதாகிருஷ்ணன். இந்தக் காரணத்தைக் காட்டித்தான் அவருக்கு அரசமைப்புக் கவுன்ஸிலில் இடம் மறுக்கப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணிகள் எல்.ஸி.செனிவிரத்ன, ரஞ்சித் அபேசூரிய ஆகியோர் அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியை ஏற்காமல்விட்டதும் இதறகாகத்தான்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு ஜே.வி.பி. சார்பில் பிரேரிக்கப்பட்ட சட்டத்தரணி எஸ்.எஸ்.விஜேரத்ன நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பணியாற்றுவதை விட்டுவிடுவதான இணக்கத்தின் அடிப்படையில் இப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சார்பில் இந்த அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வாவுக்கு மட்டும் இந்த ஏற்பாடு பொருந்தாமற்போனது ஏன் என்று இப்போது கேள்வி எழுப்பப்படுகின்றது.

18ஆவது மற்றும் 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவுகளை கடந்தவார இறுதியில் உயர்நீதிமன்றம் விசாரணை செய்தது.

19ஆவது திருத்தத்தை எதிர்த்து பிரதான எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின்மீது அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினரான சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா ஆஜராகி வாதாடியிருக்கின்றார்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு நியமிக்கப்படுவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்ய அனுமதிக்கக்கூடாது. அதற்கேற்றவகையில் அவர்களுக்கு அரசமைப்பு ரீதியாக சட்டவிலக்கு அளிக்கப்படவேண்டும் - இப்படி வலியுறுத்திய அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர்களில் எச்.எல்.டி. சில்வாவும் ஒருவர். அவரது கோரிக்கைக்கு ஏற்பவே அரசமைப்புக் கவுன்ஸல் உறுப்பினர்களுக்கு அத்தகைய சட்டவிலக்கு அளிக்கும் 18ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த 18ஆவது திருத்தத்துடன்தான் 19ஆவது அரசமைப்புத் திருத்தமும் உயர்நீதிமன்ற விசாரணைக்கு வந்தது. அந்த விசாரணையில்தான் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர் ஜனாதிபதியின் கட்சியின் சார்பில் ஆஜராகி தமது நடுநிலைமைப் பண்பைக் கடைப்பிடிக்கும் தமது பொறுப்பைக் கைவிட்டு வாதாடியிருக்கிறார்.

ஜனாதிபதியின் பிரதிநிதி என்பதால் அவர் மட்டும் சட்டத்தின் முன்னால் வேறானவரா? சட்டத்துறையினர் மத்தியில் எழுப்பப்படும் கேள்வி இதுதான்.

# தமிழ்க் கைதிகளின் விடுதலைகோரி வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஒக்.8

கைதுசெய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, விடுதலை செய்யக்கோரி இன்று செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது. இவ்ஆர்ப்பாட்டத்தை அப்பகுதி வெகுஜன அமைப்புகள் ஏற்பாடுசெய்துள்ளன.

வவுனியா நகரின் நான்கு முனைகளில் இருந்து புறப்பட்டு வரும் பேரணிகள் நகரைச் சென்றடையும். பேரணியின் முடிவில் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் உள்துறை அமைசசர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்ப ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியக் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்ததாவது:-

“அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து, சில போராளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், எந்தவித யுத்த நடவடிக்கைகளிலும் ஈடுபடாத தமிழர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்” - என்றார். (ஒ-9-164)

### மந்திரத்தாயத்து விற்ற

## காட்டுராஜா குழுவினர் அப்புறப்படுத்தப்பட்டனர்

குடாநாட்டில் பல பகுதிகளிலும் தாயத்து, மணிமாலை மற்றும் காட்டு மிருகங்களின் பற்கள், எலும்புகள் போன்றவற்றை, அதிர்ஷ்டம் தருமெனவும், நோய்களைத் தீர்க்குமெனவும் கூறி அவற்றை ‘மந்திரித்து’ பொதுமக்களுக்கு விற்பனை செய்து வந்த ‘காட்டு ராஜாக்கள்’ எனப்படும் இந்தியப் பூர்வீகக்குடிகளில் சிலர் நேற்று பொதுமக்கள் சிலரால் அப்புறப்படுத்தப்பட்டனர்.

யாழ்.குடாநாட்டு மக்களின் மத்தியில் மூடநம்பிக்கையை வளர்ப்பதாகக் கூறியே இவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். இவர்கள் தொழில்புரியும் முக்கிய இடங்களான யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாகவுள்ள ஆஸ்பத்திரி வீதி, யாழ்.பஸ்நிலையம் முன்பாகவுள்ள வீதி ஆகிய இடங்களில் நேற்று நண்பகல் திடீரென சிலர் கூடினர்.

மக்களின் மனங்களில் மூட நம்பிக்கைகளை ‘காட்டுராஜா’ குழுவினர் வளர்ப்பதாகவும் -

யாழ்.குடாநாட்டு மக்களை ஏமாற்றி அதிக தொகையான பணத்தை அவர்கள் வசூலிப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக மாயமந்திரப் பொருள்களை எடுத்துக்கொண்டு சென்றுவிடவேண்டும் எனவும் -

யாழ்.தமிழ் மக்களை இவ்வாறு ஏமாற்றி பணம் வசூலிக்க முடியும் எனக் கனவு காணக்கூடாது எனவும் -

‘காட்டுராஜா’ குழுவினருக்கு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தமது பொருள்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு ‘காட்டுராஜாக்கள்’ அவ்விடங்களைவிட்டு அகன்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

‘காட்டுராஜாக்கள்’ எனப்படும் இந்தியாவின் பூர்வீகக் குடிகளாகிய தாம் மேற்படி வியாபார நடவடிக்கைகளுக்காக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து இங்கு வந்ததாக இவர்கள் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

## கோவிலாக்கண்டி கடலேரியில் படகுமூலம் மீன்பிடிக்க அனுமதி

தென்மராட்சி,ஒக்.8

கடந்த 1999ஆம் ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி தொடக்கம் மீன்பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்த நாவற்குழி கோவிலாக்கண்டி கடலேரியில் குறிக்கப்பட்ட பகுதிகளுக்கு அப்பால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் காலை தொடக்கம் மாலை வரை வள்ளங்களில் சென்று மீன்பிடிக்க நேற்றுமுன்தினம் தொடக்கம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச படையணி பிரிகேடியர் ஜெயவர்த்தனா, தனங்களப்பு அம்மன் கோவிலடியிலிருந்து அரியாலை முனை வரை அமைக்கப்பட்டிருந்த பாலத்தை திறந்துவைத்து கடற்றொழிலாளர்கள் சென்று வர கடந்த சனிக்கிழமை அனுமதி வழங்கினார்.

அரியாலை கடற்கரையிலிருந்து கிழக்குப் பக்கமாக 200 மீற்றருக்கு அப்பாலும், கோவிலாக்கண்டி கடற்கரையிலிருந்து தெற்குப் பக்கமாக 200 மீற்றருக்கு அப்பாலும், படையினரால் கடல் ஊடாக அமைக்கப்பட்டுள்ள பாலத்திற்கு 300 மீற்றருக்கு அப்பால் மேற்குப் புறமாகவும் வள்ளங்களில் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதகாலமாக கடல் ஊடாக அமைக்கப்பட்ட பாலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடந்துசென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டதையடுத்து 25 கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். கோவிலாக்கண்டிப் பிரதேசத்தில் தற்போது பெருமளவு மக்கள் குடியேறியுள்ளதால் நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தொழில்செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

மீன்பிடிக்க அனுமதி வழங்கும் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் செ.முருகையா, கிராம அலுவலர் சுபாநாதன், கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம், விவசாய சம்மேளனத் தலைவர் மா.லீலாவினோதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த அனுமதிப்படி கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படம் ஒட்டிய அனுமதிப்பத்திரத்தை கடற்கரையில் உள்ள முகாமில் ஒப்படைத்துவிட்டு தினமும் காலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதே வேளை, சாவகச்சேரியிலிருந்து கச்சாய் வரையான கடலேரியில் மீன்பிடிக்க அடுத்த வாரமளவில் அனுமதி வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-11.7)

### நாளை

புரட்டாதி 23
புதன்கிழமை
(09.10.2002)
திதி : திருதியை
முற்பகல் 10.10 வரை.
நட்சத்திரம்: விசாகம்
முன்னிரவு 8.50 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 4.32 - 6.01
ராகுகாலம்: 12.02 - 1.32
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கேட்பது அனைத்தையும் நம்புவதும், அறிந்தது அனைத்தையும் கூறுவதும் அறிவீனர் செயல்.

### தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவான

## எதிர்ப்பு நடவடிக்கைகளில் பல்கலை ஊழியர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்துள்ள அடையாள எதிர்ப்பு நடவடிக்கைக்கு யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், நாளை புதன்கிழமை முற்பகல் 9மணிமுதல் 11மணிவரை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு முன்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் அடையாள எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன.

இந்த அடையாள எதிர்ப்பு நடவடிக்கைகளில் யாழ்.பல்கலைக கழக ஊழியர் சங்கமும் கலந்துகொள்ளவுள்ளதால் பல்கலைக கழகத்தில் கடமையாற்றுகின்ற ஊழியர்களில் நீர், மின்சாரம், பாதுகாப்பு மற்றும் பரீட்சை நிலையம், பட்டமளிப்புவிழா முன்னேற்பாடுகள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் தவிர்ந்த மற்றைய ஊழியர்கள் அனைவரையும் இந்த அடையாள எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.கலாராஜ் கேட்டுள்ளார். (ஒ-5)



பொலீஸ்மா அதிபராகப் பதவியேற்றுள்ள ரி.ஈ.ஆனந்தராஜா கொழும்பு வெள்ளவத்தை மயூரா அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனையில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம். விமாசி நிறுவன உரிமையாளர் நா.கிரிதரன், ஆலய தர்மகர்த்தா ஆகியோரும் அருகில் உள்ளனர்.

## யாழ். மாநகராட்சிப் பணிக்கு 22 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ். மாநகரசபைக்கென 22 லட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து சந்தைகள் புனரமைப்பு, சனசமூக நிலையங்கள் திருத்தம், தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, ஒழுங்கைகள் புனரமைப்பு ஆகியவற்றுக்கு வழங்கப்படவுள்ள நிதி விவரம் வருமாறு:-

வண்ணான்பண்ணை ஐங்கரன் சனசமூகநிலைய திருத்த வேலைக்கு 50 ஆயிரம் ரூபா. அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபா. அரியாலை சனசமூகநிலைய புனரமைப்புக்கு ஒரு லட்சத்து 75ஆயிரம் ரூபா. கல்வியங்காடு சந்தை புனரமைப்புக்கு 6 லட்சத்து 45 ஆயிரம் ரூபா. நல்லூர் மந்திரிமனை புனரமைப்புக்கு 4 லட்சம் ரூபா. அரியாலை காந்தி சனசமூக நிலைய கட்டட வேலைக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா. அரியாலை காந்தி சனசமூகநிலைய விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் கொள்வனவுக்கு 10ஆயிரம் ரூபா. வண்ணார்பண்ணை வடமேற்கு காரைக்காடு ஒழுங்கை திருத்தவேலைக்கு 2 லட்சம் ரூபா. கல்வியங்காடு வன்னியசிங்கம் பொதுப்பணி மன்ற அபிவிருத்தி வேலைக்கு 50 ஆயிரம் ரூபா. குருநகர் புதுமைமாதா சனசமூக நிலைய புனரமைப்புக்கு 25 ஆயிரம் ரூபா. யாழ்.திருநகர் பாரதி சனசமூகநிலைய திருத்தவேலைக்கு 50 ஆயிரம் ரூபா. யாழ்.மானிப்பாய் வீதி உதயதாரகை சனசமூக நிலைய புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபா. யாழ்.கிறீன் பீல்ட் சனசமூகநிலைய தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபா. குருநகர் தொடர்மாடி முன்பள்ளி தளபாடக்கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபா. யாழ்.சிவன்கோயில் வடக்கு வீதி, திருத்த வேலைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா. (ஒ-10)

## மருதங்கேணிப் பிரதேசத்தில் கிராம அலுவலர் பற்றாக்குறை

செம்பியன்பற்று,ஒக்.8

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 18 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள போதும் 9 கிராம அலுவலர்களே பணியாற்றுவதால் அப்பிரதேச பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

இப்பிரதேசத்தில் 3கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. மற்றைய 15 கிராம சேவையாளர் பிரிவுகளில் 3கிராம சேவையாளர்களைத் தவிர 6கிராம சேவையாளர்கள் தலா இரண்டு பிரிவுகளை பொறுப்பேற்றுள்ளனர்.

இதனால் மீளக்குடியமர்ந்த மக்கள் கிராம சேவையாளர் சம்பந்தப்பட்ட அலுவல்களை மேற்கொள்ள சிரமப்படுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-7)




# ஜே-297 கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்வதற்கு கோரிக்கை

## படை அதிகாரியிடம் மகஜர் சமர்ப்பிப்பு

தென்மராட்சி,ஒக்.8

தென்மராட்சி பிரதேசத்தின் கைதடி நாவற்குழி கிராம அலுவலர் பிரிவில் (ஜே/297) நாவற்குழி கேரதீவு வீதியில் உள்ள குடியிருப்புகளில் இன்னமும் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால், இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 50இற்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புகளில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு 521 படையணி தளபதியிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர். இது குறித்து மகஜர் ஒன்றை அவர்கள் அதிகாரியிடம் சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி கிராம அலுவலர் பிரிவில் கடற்கரையை அண்டிய பகுதிகளில் 200இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், நாவற்குழி கேரதீவு வீதியில் உள்ள தமது வீடுகளில் மீளக்குடியமர அனுமதிக்காதது பெரும் கவலையைத் தருவதாக அவர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

குடியிருக்க அனுமதிக்கும் பட்சத்தில் தமது குடியிருப்புடன் அண்டிய வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியுமெனவும் அவர்கள் படைத்தளபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த மகஜரின் பிரதிகள் தென்மராட்சி பிரதேச செயலர், இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-117)

## தளபாடக் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய்,ஒக்.8

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் நூலகத்திற்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து ரூபா 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். (எ-135)

## குப்பைக்குள் இருந்த குண்டு வெடித்தது

பற்றைக் காடாகக் காணப்பட்ட காணியைத் துப்புரவு செய்து குப்பைகளை எரித்தபோது அதற்குள் மறைந்திருந்த குண்டு ஒன்று வெடித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்றது.

குண்டு வெடித்த அதிர்வில் அடுத்த காணியில் இயங்கும் சாவகச்சேரி நகர சபையின் பொது நூல் நிலைய மீசாலைக் கிளையின் அலுமாரிக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் தூக்கி வீசப்பட்டன.

குப்பையை எரித்தவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டதால் உயிராபத்து தவிர்க்கப்பட்டது. (எ-117)

## புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.8

புத்தாயிரமாண்டு புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை கடற்படைத்தள கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்குவார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கென யாழ்மாவட்டப் பாடசாலைகளில் இருந்து செல்லும் மாணவர்களுக்கென திருமலை புனிதமரியாள்கல்லூரி, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆகியன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.சண்முகலிங்கம் அறிவித்துள்ளார். (எ-5)

## பாராட்டி வாழ்த்துதலும் பிறந்தநாள் வாழ்த்தும்



யாழ்.புனித ஜோண் பொஸ்கோ பாடசாலை மாணவி

**செல்வி யேசுராஜா ஸறென்சியா**

அவர்கள் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை 2002இல் 125 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரைக் கல்வி புகட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரிய மணிகள், மேலதிக ஊக்கங்கொடுத்த சிசிலியன் நிறுவன ஆசிரியர்கள், பிரத்தியேக ஊக்குவிப்பு வழங்கிய பபி ஆசிரியை ஆகியோரையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

இன்று (2002.10.08) செவ்வாயன்று தமது 10ஆவது பிறந்தநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் செல்வி ஸறென்சியா பல்கலையும் கற்றுப் பல்கலைக்கழகம் சென்று மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று மிளிர,

அப்பா, அம்மா, அன்ரி, அண்ணாமார், அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அத்தான், அக்காமார், மாமி, மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார், சகோதரர்கள், தொட்டப்பா, தொட்டம்மா, அண்ணா அனைவரும் குழந்தை யேசுவின் அருளும் ஆசீரும் பெற்று நலமுடன் பல்லாண்டு காலம் சிறப்புற வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*இல.101, கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (9025)

வாழ்த்தும் நன்றியும் கூறும்:
யே.கொக்கின்சன் அண்ணா.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY



BIRTHDAY

**செல்வி விஜயபாஸ்கர் ஆஷிகா**

408, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
திரு. திருமதி விஜயபாஸ்கர் - ரோஜாரமணி தம்பதியினரின்
செல்வப் புதல்வி ஆஷிகா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (08.10.2002) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அன்பு அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, வினி அன்ரி, விஜி மாமி குடும்பத்தினர், கிராண்மம்மி குடும்பத்தினர், நல்லூர் அம்மம்மா குடும்பத்தினர் ஆகியோர் குழந்தை யேசு அருள பெற்று பல்கலையும் ,கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*408, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (9162)

இ.வினிதா
*(அன்ரா)*

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**மகேஸ்வரி தர்மலிங்கம்**
(ஆசிரியை)

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய்த் திகழ்ந்த
உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

(9147)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08-03-1940 | 08-10-1999 |

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

கணவர்,
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி அருணஜோதி வல்லிபுரநாதன்
அவர்களின் அன்புத்தந்தை

**தில்லையம்பலம் சிவசோதிலிங்கம் (சோதி)**

*(முன்னாள் இ.போ.ச.முகாமி)*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஐக்கிய சங்கம்,
நவீல்ட் பாடசாலை, கைதடி.

(9015)

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்

### லொறிச்சாரதி பதவி வெற்றிடம் - 13(165/88)

எமது சங்கத்தின் லொறிச்சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிப்போர் 25.10.2002ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் - கொடிகாமம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். தகைமைகள் மற்றும் விவரங்கள், விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை ரூபா 25/- செலுத்தி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.

(C/24097)

## FOR SALE

**GLUCOTREND BLOOD GLUCOSE METER (GERMANY)**

With Soft Clix Lancing Device for obtaining blood and operating manual and lancets.

*Inspection*
*9.00 a.m. to 12.00noon*
**8th, 9th, 10th October**
Telephone: 2222359
***40, Wyman Road, Jaffna.***

(9048)



# உயிரோட்டமானது மழலைக் கல்வி

### முன்பள்ளிப்பருவ அபிவிருத்தியின் முக்கியம்

கருவில் இருந்து 5 வயதான காலகட்டம், மனிதவள அபிவிருத்தியில் அடித்தளம் இடும் மிகமுக்கியமான காலகட்டம் என வரையறுக்கப்பட்டுள்ளது. மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சி என்பன துரிதமாக ஏற்படும் காலம் இது எனவும், 75% மூளை அபிவிருத்தி இக்காலத்திலேயே ஏற்படுவதாகவும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான அறிஞர்கள் விஞ்ஞான ஆய்வுகளின் ஊடே தெரிவித்துள்ளனர். இக்காலத்தில் ஒரு பிள்ளை எப்படி உருவாகின்றதோ, அதே போன்றே பிற்காலத்தில் திகழ்கின்றது. எனவே, நிலத்தைப் பண்படுத்துவது போல் உடல், மனம் இரண்டையும் நன்கு பண்படுத்தும் காலம், வலுவான மாற்றங்கள் நிகழும் பருவம் இது என்றும் கூறுவர்.

தமிழ் மூதுரையில் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பது இவ்விஞ்ஞான உண்மையை விளக்கி நிற்கின்றது. இதில் இருந்து இக்காலத்தில் வழங்கப்படும் கல்வி, பிற்காலக் கல்வி அனைத்திலும் முதன்மை, முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. இத்தகு முக்கியத்துவம் கருதியே, பிற்காலச்சந்ததி சுதந்திரத்துடனும், சிறப்புடனும் வாழவேண்டுமென்ற நீண்ட தூர நோக்குடனேயே, சுதந்திர வாழ்வுக்கு கல்வி ஒரு முக்கிய நிபந்தனை என்ற எண்ணப் பாட்டிலேயே எமது தேசியத் தலைவர் சிறுவர் போசாக்கு, குழந்தை நலன், முன்பள்ளிகள் ஆகியவற்றுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து அவற்றை நடைமுறைப் படுத்துமாறு வலியுறுத்தி வருகின்றார்.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி செயற்பாடுகள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. பிள்ளை கருவுற்ற காலத்தில் இருந்து 3வயது காலத்திற்குரிய அபிவிருத்திச் செயற்பாடு, பெற்றார் வீட்டுக்கல்வி என்ற வரையறையிலும், 3தொடக்கம் 5வயது வரையான காலப்பகுதி முன்பள்ளிக் கல்வி என்ற வரையறையிலும் வகுக்கப்படுகின்றது. மகப்பேற்றுத் தாய்மார், பாலூட்டும் தாய்மார், பிள்ளைகள் ஆகியோரின், சுகாதாரம், போசாக்கு, பராமரிப்பு, அன்பு செலுத்துதல், கற்றல் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்தல், நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளில் கற்றல் எண்ணக்கருக்களை உருவாக்கல் என்ற ரீதியில் பெற்றார் வீட்டுக்கல்வி அமைகின்றது.

3 - 5வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் முறையான இருப்பு, வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றை நோக்காகக் கொண்டு, அதற்கான வளங்களையும், சந்தர்ப்பங்களையும், கற்றலுக்கான வசதிகளையும் முன்பள்ளிகளில் உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். விளையாட்டு விளையாட்டாக, மகிழ்வுடன், எவ்வித வற்புறுத்தலுமின்றி பிள்ளைகள் கற்பதற்கானதும், அனுபவங்களை பெறுவதற்கானதும், தொடர்புகளைக் கட்யெழுப்புவதற்குமான சூழ்நிலையை முன்பள்ளிகளில் உருவாக்கிக்கொடுக்க வேண்டும். சுகாதாரத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியும், இலகுவாக்கிப் போசாக்கான ஒரு நேர உணவு வழங்கியும் இயலுமாகில் அன்புடனும், ஆதரவுடனும் பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு, விளையாடவும், அதனோடு கற்கவும் முன்பள்ளிகள் உதவுதல் வேண்டும். முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி குறித்து ஒரு வள அறிஞர் கூறும்போது, "படைப்பாற்றல் உள்ளவராக எப்படி இருப்பது என்பது குறித்து பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் செய்ய வேண்டியது என்னவெனில், பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான இடம் ஒன்றையும், தேவையான கருவிகளையும் பெற்றுக்கொடுப்பதுதான். மிகுதியை பிள்ளைகளே கவனித்துக் கொள்வார்கள்" என்று தெரிவிக்கின்றார். இவற்றை நிறைவு செய்யும் பொருட்டே, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வன்னியிலும், ஏனைய இடங்களிலும் முன்பள்ளிகள் உருவாக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உள்ளூர் பங்காளர் நிறுவனங்கள் மூலம் முன்பள்ளிகளின் பௌதிக வளங்களை உருவாக்கலும், பராமரித்தலும் இடம்பெறுகின்றது. கற்றல், கற்பித்தல், ஆசிரியர் பயிற்சி, ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் பொறுப்பாக இருக்கின்றது. கல்வி வலைய ரீதியாக வன்னியில் 5 முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையங்கள் இயங்குகின்றன.

உள்ளூர் நிறுவன இணைப்பாளர்களையும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய மேற்பார்வையாளர் களையும், பெற்றார் அமைப்பு பிரதிநிதிகளையும், முன்பள்ளிகளை நிர்வகிக்கும் நிறுவனப் பிரதிநிதிகளையும், கொண்டியங்கும் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்கள், பிரதேசங்களிலுள்ள முன்பள்ளிகளின் ஒட்டுமொத்த நலன்களையும் பேணி, முன்பள்ளிக் கல்வியைப் பாதுகாப்பவையாக அமைகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழக, முன்பிள்ளை அபிவிருத்திப் பிரிவு வன்னியின் அனைத்து முன்பள்ளிகளையும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்கள் மூலம் ஒருங்கிணைத்து, திட்டமிடல் ஆலோசனையும், வழிகாட்டலும் வழங்கி, ஒழுங்கமைத்து முன்பள்ளிச் செயற்பாட்டை மேம்படுத்தும் பொறுப்புடன் செயற்படுகின்றது. மாதிரி முன்பள்ளிகளை அமைத்தல், முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு போசாக்கு உணவுக்கும், பௌதிக மாற்றங்களுக்கு, நிதி வழங்கல், தேவையானபோது பயிற்சி வழங்கல், 341 ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குதல் (1994ஆம் ஆண்டு முதல்) ஆகியவற்றைத் தமிழர் புனர்வாழ்வுக கழகம் பொறுப்பெடுத்துச் செய்கின்றது. இதற்காகப் பல லட்ச ரூபாய்களை மாதாந்தம் செலவழித்துக் கொண்டிருக்கின்றது.

### முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கட்டமைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1994.12.27 இல் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் எனும் கட்டமைப்பை உருவாக்கியது. முன்னாள் வடமாநில கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் அவர்களும், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரியான சுப்ரமணியம் அவர்களும் இணைந்து முன்பள்ளி கல்விக் கலைத்திட்டம் எனும் நூலை ஆக்கம் செய்தனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்நூலை தமிழீழ கல்விக் கழகத்தின் ஆதரவுடன் வெளியிட்டு வைத்தது. அரச நிதி ஒதுக்கீடு முன்பள்ளிக் கல்விக்கு இல்லாதிருந்த போது, முன்பள்ளிக் கல்விக்கான ஒரு கொள்கை வகுப்பு இலங்கையில் இல்லாதபோது முன்பள்ளிக் கல்வியைப் பேணுவதற்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் உருவாக்கம் பெற்றதும், முன்பள்ளிக் கல்விக் கலைத்திட்டம் எனும் நூல் வெளியிடப்பட்டதும் ஒரு மைற்கல்லான விடயமாக அமைந்தது. இச்செயற்பாடுகள் சிறுவர்களின் நலன்களைப் பேணும், பன்னாட்டு உதவி நிறுவனங்களின் உதவிகளைத் தமிழ்ப் பகுதிகள் பெறுவதற்கான அரிய வாய்ப்பினையும் பெற்றுக் கொடுத்தன.

**லோறன்ஸ் கிறிஸ்ரி,**
முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

வன்னியின் ஒவ்வோர் உதவி அரச அதிபர் பிரிவிலும் ஒவ்வொரு பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய நிர்வாகக் கட்டமைப்பு உள்ளது. குறித்த பிரதேசத்தின் முதன்மை அரசசார்பற்ற நிறுவனம் இக்கட்டமைப்பை வழிநடத்திச் செல்கின்றது. இவ்வாறு பிரதேச ரீதியாகத் தெரிவு பெறும் நிர்வாக உறுப்பினர்கள் கல்வி வலய ரீதியாக ஒன்று சேர்ந்து வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய கட்டமைப்பை உருவாக்குகின்றனர். இக்கட்டமைப்பில் பதவி வழிரீதியாக வலயக்கல்விப் பணிமனையின் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் தலைவராகச் செயற்படுவார். முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு கட்டமைப்புக்களில் மதஸ்தாபனங்கள், மாதர் சங்கங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் என முன்பள்ளிகளை நிர்வகிக்கும் பொது அமைப்புக்களும், தனியாரும், கல்வித் திணைக்களமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வன்னி ரீதியாக அமைக்கப்பட்ட பிள்ளைப்பருவ அபிவிருத்தி, பிரிவு, வன்னியிலுள்ள முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தி வருகின்றது. மாதாந்தம் இருதடவைகள் சகல முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையங்களுக்கான சந்திப்பினை இப்பிரிவு ஒழுங்குபடுத்தி உள்ளது.

### எதிர்நோக்கும் பிரச்சினைகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அதன் பங்காளி அமைப்புக்களும் 282 முன்பள்ளிகளை வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடத்துகின்றன.

*I பௌதிக நிலைமைகள்*

கட்டடத் திருத்தம், கூரை வேய்தல், விளையாட்டு முற்றம் அமைத்தல், பதிவேடுகள், காகிதாதிகள், பூங்கா அமைத்தல், கணித மூலை, விஞ்ஞானமூலை, பெற்றோர்மூலை, மண் மூலை, நீர்மூலை, மொழிமூலை என்ற ரீதியில் ஆறு மூலைகள் அமைத்தல் ஆகியன ஒரு முன்பள்ளிக்குரிய பௌதிக தகுதிகளாக அமைகின்றன. இவற்றுக்கு ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கில் பணம் செலவழிக்கப்பட வேண்டும். அதனைத் தாங்கக்கூடிய வலு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடமோ அல்லது பங்காளி நிறுவனங்களிடமோ இல்லாதபடியால் நிறைந்த குறைபாடுகளைக் கொண்டதாகவே பௌதிக வசதிகள், கட்டுமானங்கள் காணப்படுகின்றன.

*II சம்பளம்*

341 ஆசிரியர்களுக்குச் சம்பளம் மாதாமாதம் வழங்கப்படுதல் வேண்டும். குறைந்தது ஆயிரம் ரூபாயாவது வழங்குதல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சம்பளத்தைக் கொடுக்க மாதாந்தம் $3\frac{1}{2}$ லட்சம் ரூபா வேண்டும்.

இந்த ஆயிரம் ரூபாயானது ஆசிரியர்களுக்கு நாளும் முன்பள்ளி செல்லத் தேவையான உடை போன்றவற்றை வாங்குவதற்கே போதாது. பிள்ளைகளின் உடல், உள நிலைகளை ஆராய்ந்து, அறிந்து அவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு கற்பித்தலை மேற்கொள்ளும் இவ் நுணுக்கமான கற்பித்தல் செயற்பாட்டுக்குரிய சம்பளம் இதுவல்ல. எனவே, முழுமையான தரம் வாய்ந்த ஆசிரியர் ஒருவரை 1000 ரூபாவுக்கு நியமிக்க முடியாது. வேறு வருவாய் தரும் தொழில் கிடைத்தால் அவர்கள் அதற்கு மாறுவதை நாம் தடுக்கவும் முடியாது. எனவே, முன்பள்ளிக் கல்வியை உயர்தரத்திற்குக் கொண்டு செல்லுதல் என்பதில் சம்பளம் என்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. முழுமையான பயிற்சி பெற்ற, தரம் வாய்ந்த ஆசிரியர்கள் பலர் எமது முன்பள்ளிகளில் கடமை புரியவே செய்கின்றார்கள். அவர்கள் அதனை உயர்ந்த தொண்டு மனப்பான்மையுடனேயே செய்கின்றார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

*III நீர் சுகாதாரம்*


அடிப்படைப் பௌதிக நிலமையையே உருவாக்க முடியாத நிலையில் நிரந்தரக்கிணறு, மலசலகூடம் அமைத்தல் என்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயமாக உள்ளது. தற்காலிகமான சலகூடங்களையும், ஆழம் குறைவான இடங்களில் தற்காலிக வெட்டுக் கிணறுகளையும் நிறுவனமும், மக்களும், உறுதியோடு தீர்மானித்தல் செய்யலாம். மலத்தை வெட்டிப் புதைக்க மண்வெட்டியைப் பயன்படுத்தலாம். கற்பாறையான, உயரம் கூடிய, இடிந்துவிழும் மணல் நிறைந்த இடங்களில் தற்காலிக வெட்டுக் கிணறுகளையோ அமைக்க முடியாது.

எனவே, பல முன்பள்ளிகளில் கனி மரங்களற்ற, பூஞ் செடிகளற்ற, பூங்கனிச் சோலைகள் அமைக்க முடியாத வேலிகளற்ற கட்டாந் தரைகளாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. முன்பள்ளிகள் பெற்றோரின் பங்களிப்பிலேயே பெரும்பாலும் இயங்குதல் வேண்டும். ஆயினும், வன்னியில் இடம்பெயர்ந்து போர் நெருக்கடிக்குள்ளும், வருமானம் இன்றியும் வாழும்மக்களிடம் நாம் குறைந்த பங்களிப்பையாவது பெறுவது மிகவும் சிரமமான விடயமாகும்.

### பன்னாட்டு நிறுவனங்களின் உதவி

ஐ.நா. சிறுவர் நிதியம், சிறுவர் பாதுகாப்பு (ஐக்கிய இராட்சியம்) ஆகிய அமைப்புக்கள் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக உதவிகளைப் புரிந்து வருகின்றன. 2000ஆம் ஆண்டு கிளி., முல்லை மாவட்டங்களில் முறையே 202, 278 ஆசிரியர்களுக்கு 21 நாள் வதிவிடப் பயிற்சி சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இரு மாவட்டங்களிலும் 239 முன்பள்ளிகளுக்கு கரும்பலகையும், அலுமாரியும் கொடுக்கப்பட்டது.

மேலும், உணவல்லாத பொருள்கள், கற்பித்தல் உபகரணங்கள், சிறுவர்களுக்கான நூல்கள் ஆகியவற்றையும் காலத்திற்குக் காலம் கொடுக்கின்றன. ஐ.நா. சிறுவர் நிதியம் விளையாட்டு அல்லாத விளையாட்டு என்ற நூலை, இலங்கையின் மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகப் பிரிவு ஊடாக 2001இல் வெளியிட்டது. தற்போது இந்நூல் சகல முன்பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2001இல் கிளிநொச்சி மாவட்டத்தில் 94 முன்பள்ளிகளுக்கு விளையாட்டு முற்றத்திற்கான சீசோ, ஊஞ்சல்களை ஐ.நா. சிறுவர் நிதியம் வழங்கியது.



2002இல் பெரியதொரு திட்டத்தை ஐ.நா. சிறுவர் நிதியம் நடைமுறைப படுத்தி வருகின்றது. இதன் பிரகாரம் 5 மாதிரி முன்பள்ளிகளை 5 கல்வி வலயங்களில் அமைத்தல், 225 பாடசாலைகளை திருத்தம் செய்தல், 225 பாடசாலைகளுக்கு உணவல்லாத பொருள்களையும், கற்றல் உபகரணங்களையும் வழங்கல், சீசோ, ஊஞ்சல் வழங்கல் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய மேற்பார்வையாளர்கள், நிறுவனங்களின் மேற்பாவையாளர்களுக்கு 9நாள்கள் பயிற்சி வழங்கல், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலை மேற்பார்வையாளர்கள் 17பேருக்கு ஈருருளி, ஒரு வருடக் கொடுப்பனவு வழங்கல் என்ற ரீதியில் உதவி அமைகின்றது. சிறுவர் பாதுகாப்பு, பெற்றார் வீட்டுக்கல்வி செயற்திட்டத்தை முல்லை, கிளி. மாவட்டங்களில் 10 கிராமங்களைத் தெரிந்து 1000 பெற்றாருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் செயற்பாட்டை முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. மேலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. சபை நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவற்றைக் கொண்டதாக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பாக ஒன்றுகூடி ஆய்வு செய்யும் கட்டமைப்பு ஒன்று உண்டு. இதுவும் காலத்திற்குக்காலம்கூடி, முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை வகுத்தல், திட்டங்களை அடையாளம் காணல், மீளாய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

### முன்பள்ளிகளை ஒருங்கிணைக்கும் ஒழுங்கமைப்பு விதிகள்

மண்ணுக்கேற்ற கல்வி, ஒரே மாதிரியான கல்வி, எல்லோருக்கும் கல்வி என்ற நோக்கங்களின் அடிப்படையில் முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து, ஒழுங்கமைத்து, முன்பள்ளிக் கல்வியைச் சீராக்கி, மேம்படுத்தும் இலக்குடன் 2000ஆம் ஆண்டு முன்பள்ளி முன்னெடுப்பாளர் அனைவரும் இணைந்து நடத்திய செயலமர்வில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

சகல முன்பள்ளி நிர்வாகிகளையும் கொண்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கட்டமைப்பு, முன்பள்ளிச் சமூக உருவாக்கம், முன்பள்ளிக் கல்வி பற்றிய விழிப்புணர்வு, கல்வி கலைத்திட்டத் தயாரிப்பு, ஆசிரியர் தகுதி நிலை, பேண வேண்டிய பதிவேடுகள், ஆசிரியரின் குறைந்தபட்ச சம்பளம், ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் பதவி விலகல் மற்றும் புதிய முன்பள்ளிகள் அமைத்தல், மூடுதல், முன்பள்ளி நாள்கள், நேர வரையறை முன்பள்ளிப் பிள்ளைகளின் வயது எல்லை, விளையாட்டு வசதிகள், விளையாட்டு விழாக்கள், ஆக்கச் செயற்பாட்டு பயன்பாட்டுப் பொருள்கள், நீர், சுகாதார வசதிகள, போசாக்கு உணவு வழங்கல், சுற்றுப்புறச் சூழல், முன்பள்ளி அமைவிடம், பௌதிக வளங்கள், முன்பள்ளி மேற்பார்வை, மீளாய்வு என்ற விடயங்களை அடக்கியதாக அத்தீர்மானம் அமைந்தது.

பின்னர் 2002ஆம் ஆண்டில் பிரதேசக் கட்டமைப்பினை உருவாக்கி, முன்பள்ளி மேம்பாட்டுப் பொறுப்பினைப் பகிர்ந்தளித்து பரவலாக்கும் நோக்குடன் புதிய விதிகள் சேர்க்கப்பட்டன. பிரதேச முன்பள்ளிக் கட்டமைப்பு, நிர்வாக அமைப்பு முறை, கடமைகள், கூட்டங்கள் கூடும் ஒழுங்கு, நிதி நடவடிக்கைகள், பொது என்ற ரீதியில் அவை அமைந்தன. மேலும், அதே ஆண்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கட்டமைப்பிற்கு உட்பட்ட வகையில், வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்கள், பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்கள், உள்ளூர் நிறுவனங்கள், நடுவப்பணியகம், மாவட்டப் பணிப்பாளர்கள், பெற்றார் ஆசிரிய சங்கங்கள், நிறுவன சமூக நலத்திட்ட இணைப்பாளர்கள், உளவளத் துணையினர் ஆகியோர் முன்பள்ளித் தொடர்பில் ஆற்ற வேண்டிய கடமைகள் வரையறுக்கப்பட்டன.

மேலும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், கல்வித் திணைக்கள ஆதரவுடன் வாரரீதியாக பாடத்திட்டத்தை வகுத்துக் கொடுத்து ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டை இலகுபடுத்தி உள்ளது. அதுமட்டுமன்றி, முன்பள்ளியில் மேற்கொள்ளப்பட வேண்டிய விளையாட்டுக்கள், விளையாட்டு விழாக்களை நடத்தும் ஒழுங்குமுறை குறித்த சுற்று நிருபமும் அனைத்து முன்பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சியைப் பொறுத்தவரை, 1995-1997 காலப்பகுதியில் 3 மாதத்திற்கு ஒரு தடவை சேவைக் காலப் பயிற்சியை வழங்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒழுங்கு செய்தது. 21நாள் பயிற்சி நெறியை மடுக் கல்வி வலய ஆசிரியர்களுக் கும், வவுனியா வடக்கு ஆசிரியர்களுக்கும் 10 நாளகளும் வழங்கியுள்ளது. மிகுதி 11 நாள்கள் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

### முடிவுரை

*முன்பள்ளிக் கல்வி, பிள்ளைகள் பின்வரும் நோக்கங்களை எய்த உதவி செய்தல் வேண்டும்.*

01. பிள்ளையின் சுய தேடலுக்கு வழிவகுத்தல்.
02. சுயதிறனாற்றல் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.
03. பிள்ளைகளுக்குப் பாராட்டுக்கள், ஊக்குவிப்புக்கள் வழங்கி சுய செயற்பாடுகளுக்கு ஆதரவு அளித்தல்.
04. பிள்ளைகள்மீது அன்பு செலுத்துதல்.
05. அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
06. பிள்ளைகளின் உள, உடல் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.

இந்நோக்கங்களை அடைய பின்வரும் குறிக்கோள்கள் அடையப்பட வேண்டும்.

01. மன எழுச்சி.
02. அறிவாற்றல் விருத்தி.
03. சமூக விருத்தி.
04. மொழி விருத்தி.

(8ஆம் பக்கம் பார்க்க)


# மத்தியவங்கி நடவடிக்கைக்கு கூட்டுறவுச் சபை ஆட்சேபம்

வடமராட்சி கிழக்கு,ஒக்.8

கிராமிய வங்கிகளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பிரித்தெடுத்து, தனியான வங்கிகளாக இயங்கவைக்க மத்திய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கையினை இலங்கைக் கூட்டுறவுச்சபை ஆட்சேபிப்பதுடன், இந்நடவடிக்கையினை எதிர்ப்பதற்கு வடபகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை அணிதிரளுமாறு கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளின் ஒருகோடியே 70 லட்சம் ரூபா, நாடுமுழுவதிலும் உள்ள கிராமிய-வங்களில் சேமிப்பில் உள்ளது. கடந்த தமிழ் - சிங்கள புத்தாண்டின்போது ஏனைய வங்கிகளுக்கு மேலாக சேமிப்பில் கிராமிய வங்கிகள் முன்னணியில் திகழ்ந்துள்ளன. இதனைச் சகித்துக்கொள்ளமுடியாததினாலும், ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும் அமெரிக்க டொலருக்காகவும் கிராமிய வங்கிகளை கூட்டுறவாளர்களிடமிருந்து பறித்தெடுத்து, நவீன முதலாளித்துவ வாதிகளினால் நிர்வகிக்கப்படும் ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து கூட்டுறவாளர்களின் நேர்மையான வியாபாரத்தைப் பறித்தெடுக்கத் திட்டமிட்டுள்ளமையினால, இந்நடவடிக்கைக்கு எதிராக கூட்டுறவாளர்கள் அனைவரையும் அணிதிரள வேண்டும் - இவவாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-182)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 10 - 1955

மறைவு 30 - 09 - 2000

### அமரர் சுந்தரம் யோகாநந்தா

*(அதிபர், நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலை)*

*திதி: பூர்வத் திருதியை*

அன்பாய் அறிவூட்டி ஆதரவாகப் பேசி
பண்பால் உயர்ந்த நல்லாசானே - உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

(9175)

மனைவி, பிள்ளைகள்.

## உயிரோட்ட....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

05. நன்னடத்தை.
06. அழகியல்.
07. ஆன்மீகம்.
08. உடல் விருத்தி.

இக்குறிக்கோள்களை அடைவதற்கு முன்பள்ளிகளை மேம்படுத்தல் அவசியமாகும். இவ்மேம்படுத்தல் விடயத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பங்களிப்போ, சர்வதேச நிறுவனப் பங்களிப்போ, உள்ளூர் நிறுவனப் பங்களிப்போ நிறைவு செய்யப் போவதில்லை. இங்கு பெற்றார், உற்றார், கிராமத்தவர், நலன் விரும்பிகளின் பங்களிப்பு அவசியமாகின்றது. அவர்கள் அணிதிரட்டப்பட்டு, முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம், சமூக சேவை, பங்கேற்பு அபிவிருத்தி குறித்து விழிப்புணர்வு ஊட்டப்பட்டு அவர்களது மூளை ஆற்றல், உடல் ஆற்றல், விருப்பங்கள், கனவுகள், அன்புணர்வு என்பன ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இதனோடு குறைந்த விலையிலோ, விலைகொடுக்காமலோ பெறக்கூடிய இயற்கை வளங்கள் ஒருங்கிணைக்கப்படும் போது நாம் முன்பள்ளிகள் குறித்து சாதனைகளையும், அற்புதங்களையும் நிகழ்த்த முடியும்.

முன்பள்ளிச் சமூகமட்டத்தில் இந்த மனமாற்றத்தை, சாதகமான சிந்தனைத் திருப்பத்தை ஏற்படுத்தக் கூடிய அனுசரணையாளர்களாக, சமூக உணர்வூட்டாளர்களாக, சமூகத்தை அணிதிரட்டி முன்பள்ளி மேமபாட்டை நடைமுறைப்படுத்தும் ஊக்குவிகளாக ஆசிரியர்கள் செயல்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். அரச நிதி உதவியின்றி நடத்தப்பட வேண்டிய மிகமுக்கியம் வாய்ந்த முன்னேற்றச் செயற்பாடாக இது உள்ளது. எனவே, இது முன்பள்ளி முன்னெடுப்பாளர் அனைவர் முன்பும் விரிக்கின்ற ஒரு சவாலாகவுள்ளது.

## தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் சிறிய பிராமண குடும்பம் வசிப்பதற்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை.

*தொடர்பு:-*

**விளம்பர இலக்கம் 1665,**
**மே/பா உதயன், யாழ்ப்பாணம்.**

(9180)


**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**

**P.O. BOX 162 COLOMBO**

**புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் நூலக வார நிகழ்வு 07.10.2002 முதல் 11.10.2002வரை நடைபெறுகிறது. இதில் விசேட கழிவுகளாக 10% முதல் 50% வரை வழங்கப்படுகிறது. (9180)


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 01 - 06 - 1940

மறைவு 03 - 10 - 1997

### அமரர் திருநாவுக்கரசு தர்மலிங்கம்

**திதி: 08.10.2002**

நெஞ்சின் அலைகளிலே அன்பை வளர்த்தீர்கள்!
பண்பாகப் பாசத்துடன் நாம் வாழ நல்ல பணி செய்தீர்கள்!
பாவிகளாய் நாமிருக்க பரிதவிக்க விட்டுச் சென்றுவிட்டீர்கள்!
கண்ணீரால் நாம் வாட கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?

*"ஒரு நொடிப்பொழுதினில் உங்கள் மறைவு*
*ஒவ்வொரு நிமிடமும் உங்கள் நினைவு"*

*17/1, கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(9174)

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.


# சுடர் ஒளி

விலை 14/-

**08-10-2002 இதழில்**

- ரணிலை ஓரங்கட்ட ஜனாதிபதி வியூகம்
- சாதனை படைத்து வரலாறான தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்
- தமிழக, கர்நாடக திரை உலகை கலக்கும் காவரிப் பிரச்சினை
- திருமலை கைதிகள் விவகாரம்
- வவுனியாவில் அதிகரிக்கும் சிசுக் கொலைகள்
- பொலிஸ் உயர் பதவிக்கு மீண்டும் ஒரு தமிழர்
- இராமர் மீட்டதால் சீதைக்குப் பெருமை
  நம்மவர் தகர்த்தால் நமக்குப் பெருமை *(தோடி)*
- அலைகளின் காவியம் *(மக்கள் துயரம்)*
- மட்டக்களப்பில் வன்முறையில் முடிவடைந்த வீதிமறியல் போராட்டம்
- மற்றும் மசாலா மிக்ஸ், சித்திரத் தொடர்கதை, இணையத் தளங்களிலிருந்து, சினிமா, பித்தன் பதில்கள், ஆந்தையாரின் க்ரைம் டயரி, விளையாட்டு உட்பட பல சுவையான அம்சங்கள்.




வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்கவைக்கும் ஒரே ஒரு பத்திரிகை!

# இந்திய ஜனாதிபதியின் மாமனார் புத்தளத்தில்

டாக்டர் ஜெயினுலப்தீன் அப்துல கலாம் கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி இந்திய நாட்டின் பதினோரா வது ஜனாதிபதியாகப் பதவியேற்று, தான் அதுவரையில் தங்கியிருந்த வதிவிடத்திலிருந்து நீங்கி, புதுடில்லி ரயிசினாகில் பகுதியில் அமைந் துள்ள ஜனாதிபதியின் உத்தியோக வழிப் பாட்டனார் இப்ராம்சா மரைக் காரும், கலாமின் தாய் வழிப் பூட்டன் சீனி நெய்னா முகம்மதுவும் உடன பிறந்த சகோதரங்களெனவும், அதன படி தனது மாமியின் பேரன என்ப தால் கலாம் தனக்கு மருமகன் உறவு முறையாகிறார் எனவும் குறிப்பிட் டார்.

**இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் மாமனாரான இப்ரா ஹிம் மரிக்கார் குடும்பத்தினர் புத்தளத்தில் வாழ்கின்றனர். அப்துல் கலாம் இந்திய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து "லக்பிம" வார இதழ் நிருபர் இப்ராஹிம் குடும்பத் தினரைச் சந்தித்து திரட்டிய தகவல்களை அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

பூர்வ வாசஸ்தலமான ராஜரபதிபவ னில் குடியேறியுள்ளனர்.

சிறிலங்காவில் சிலாபம் மகல் வீதியல் வசிக்கும் கலாமின் மாம னார் தனக்கு நெருங்கிய ஒருவர் அரசராக மகுடம் சூட்டப்படுவதை யும் பார்ப்பது போன்று, தமது குடும் பத்தைச் சேர்ந்த டாக்டர் கலாம் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கும் நிகழ்வுகளைத் தொலைக்காட்சியில் பார்த்தவாறிருந்தார்.

உண்மையில் நூறு கோடிக்கு மேலாக மக்கள் வாழும் நாட்டின் அதி யுயர் பதவியை கலாம் பொறுப்பேற் றுக்கொண்டார்.

அண்மையில் இந்தியா சென்றி ருந்த நாடாளுமன்ற விவகார அமைச சர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவ்வேளை

மேலும், இப்ராஹிம் மரைக்காரின மனைவியின் கூற்றுப்படி, தனது கணவரின் சகோதரியை கலாமின் தாயாரின் சகோதரர் மணமுடித்தி ருப்பதால் கலாம் தமக்கு மகன் முறையாவார் என்பது அவரது விளக் கம். இதை உறுதி செய்வது போல கலாமின் மாமனார் மொஹிதீன் அலி யார் மரைக்கார் என இப்ராஹிம் தெரி வித்தார்.

இது இரண்டாவது தலைமுறை யினரின் விளக்கம்.

மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த இப்ராஹிம் மரைக்காயரது இளைய மகளான இசாதியா எமது உரையாடலில் கலந்துகொண்டு இப் போது ராமேஸ்வரத்தில் வசிக்கும் தமது மூத்த சகோதரி ஆசியா உம்



இப்ராஹிம் மரைக்கார், அவரது மனைவி மஹ்ருபா, அவர்களது மகள்களான இர்பானி மற்றும் இஷாதியா.

யில் ஜனாதிபதி வேட்பாளராக அறி விக்கப்பட்டிருந்த டாக்டர் கலாமைச் சந்தித்து உரையாடிய சமயம் இப்ரா ஹிம் மரைக்கார் என்னும் தனது மாமனார் ஸ்ரீலங்காவில், அனுராதபுரத் தில் வாழ்வதாகக் கூறிய தகவலை அமைச்சர் அஸ்வர் மூலம் தெரிந்து கொண்டோம்.

சிலாபத்தைச் சேர்ந்த பாத்திமா ரஹ்மான் என்ற பெண்மணி 'நவமணி' என்ற பத்திரிகைக்குத் தெரிவித்த தக வலின் படி, இப்ராஹிம் மரைக்கார் சிலாபத்தில் அப்பெண்மணியின் வீட் டுக்கு அடுத்த வீட்டில் வசிப்பதாகவும், தாம் அறிந்த காலத்திலிருந்து டாக் டர் கலாமுடன் தமக்குள்ள உறவு பற்றி இப்ராஹிம் மரைக்காரின் குடும் பதத்னர் அடிக்கடி பேசிக் கொள்வ ரெனவும் அந்தப் பெண் தெரிவித்துள் ளார்.

இப்ராஹிம் மரைக்காரிடம் பேசிய போது தமக்கும் கலாமுக்கும் மூன்று தலைமுறை உறவு உள்ளதாகத் தெரிவித்த அவர், தனது தந்தை

மாவின் கணவரது சகோதரியையே அப்துல் கலாமின் சகோதரர் முத்து மீரா லெப்பை மணமுடித்துள்ளதா கக் கூறியதன்மூலம் உறவுமுறை யின் வேறொரு கோணத்தைச் சுட்டிக் காட்டினார்.

நாம் அறிந்தவரை அவரது பெயர் அப்துல் கலாம் என்பதாயினும், இப்ரா ஹிமின் குடும்பத்தவர்கள் அவரை அபுல் கலாம் என்றே அழைக்கின்ற னர். இந்திய சுதந்திரப் போராட்டத் தில் பங்கேற்றவரும், இந்திய காங் கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரு மான அபுல் கலாம் ஆசாத்மீது இந திய முஸ்லிம்கள் கொண்டிருந்த பெரு மதிப்பின் காரணமாய் ராமேஸ்வரத்து மக்களில் பெரும்பாலானோர் தங்கள் உறவினர்களை அபுல் கலாம் என்றே அழைக்கின்றனர்.

அப்துல் கலாமும் இப்ராஹிம் மரைக காயரும் இளவயதுவரை ராமேஸ் வரத்திலேயே வாழ்ந்தனர். அக்காலத் தில் இருவரின் குடும்பங்களும் வறுமை நிலையில் இருந்தன.

1921ஆம் ஆண்டில் பிறந்த இப்ரா ஹிம் மரைக்கார் கலாமைவிடப் பதி னொரு வயது மூத்தவர்.

கேபிள் செய்தி நிறுவனமொன் றில் இளைஞரான இப்ராஹிமுக்கு சிறிய தொழில் வாய்ப்புக் கிட்டியது. 1939இல் தனது 18ஆவது வயதில், தமது தொழில் நிறுவனத்தின் இலங் கைக் கிளைக்கு மாற்றலாகிவந்து குருநாகலில் அமைந்திருந்த காரியா லயத்தில் அவர் இணைந்துகொண் டார். சில ஆண்டுகளின் பின் ராமேஸ வரத்துக்குத் திரும்பிய அவர், 1944 இல் திருமணம் செய்துகொண்டார். முதலில் பிறந்த பிள்ளை இறந்த பின், அவரது மனைவி இரண்டா வதாகப் பெற்றெடுத்த பெண் குழந் தையே ஆசியா உம்மா. ஆசியா உம்மாவின் மைத்துனியையே கலா மின் சகோதரர் மணந்துகொண்டார்.

1960இல் அவரது மனைவியின் அகாலமரணத்தையடுத்து, இப்ரா ஹிம் ராமேஸ்வரத்தின் அயற்கிராம மான தங்கச்சிமடத்தில் இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். இப் போது தன் இரண்டாவது மனைவி யுடனும் அவர்மூலம் பெற்றெடுத்த ஏழு பிள்ளைகளுடனும் சிலாபத்தில் வாழ்ந்து வருகிறார். அவரது மூத்த இரு புதல்வர்களும் வியாபார நட வடிக்கைகளிலும், ஒருவர் பொறியிய லாளராகவும், மற்றொருவர் சட்டத் தரணியாகவும் தொழில் புரிகின்றனர். ஏனைய பிள்ளைகளில் கடைசி மகள் தவிர்ந்த மற்ற இருவரும் திருமண மானவர்கள்.

*தமிழில* **வியெஸ்ரி**

1939 முதல் 1961 வரை இப்ரா ஹிம் மரிக்கார் பல தடவைகள் இந் தியா சென்று திரும்பினாலும், அவை பற்றிய விபரங்கள் அவருக்கு நினைவி லில்லை. கேபிள் நிறுவனத்தில் சில ஆண்டு காலமே சேவையாற்றி, பின் னர் குருநாகலில் இந்தியரொரு வருக் குச் சொந்தமான கடையொன்றில் பணியாற்றினார்.

பின்னர் சிறிதுகாலம் கொழும் பில் தொழில் செய்த அவர், தமது மைத்துனரான மீராலெப்பையுடன் திரு கோணமலைக்குச் சென்று தொழில புரிந்தபோதும், தமது மைத்துனரின் துர்ப்பழக்கங்கள் காரணமாக அவரை விட்டு விலகி, அவர்மூலம் அறிமுக மான ஒருவரின் அனுராதபுரத்திலுள்ள கடையில் தொழிலுக்குச் சேர்ந்து கொண்டார். எம்.எம்.கே. மொஹிதின் சன்ஸ் என்ற பெயரில் பிரபலமாயி ருந்த அக்கடை இன்று இல்லை என் பதையும் அவர் தெரிவித்தார்.

1960இல் இரண்டாவது திருமணம செய்துகொண்ட இப்ராஹிம்முக்கு 1961இல் ஸ்ரீலங்காவுக்கு வந்தபின் 1975வரை இந்தியாவுக்குச் செல்ல சந்தர்ப்பம் கிட்டவில்லை. ஆயினும், 1975இல் அவர் குடும்பத்தவரோடு இரா மேஸ்வரம் சென்றசமயம் கலாமின் தாயார் ஆஸ்த்மா நோயினால் பீடிக் கப்பட்டிருந்தார்.

நான் அவரைக் காணச்சென்று "அக்கா, நான் இப்ராஹிம் வந்திருக் கிறேன்" எனக் கூறியபோது, "நீ வந்து விட்டாயா" என வினாவிய அவரால் அதற்குமேல் பேசமுடியவில்லை. இரு நாள்களில் பின்னர் சகோதரி மரண மடைந்தார் என இப்ராஹிம் கூறினார்.

சிறுவயதில் புத்தகம் வாசிப்பதில் தன்னுடன் போட்டிபோட்ட அப்துல் கலாம் நாட்டின் பிரசித்திபெற்ற விஞ் ஞானியாக விளங்கியதை அந்தப் பய ணத்தின் போதுதான் இப்ராஹிம் தெரிந்துகொண்டார்.

கலாம் பிரபல விஞ்ஞானியாக விளங்கியபோதிலும் அந்த நாள்க ளில் எம்மோடு சாதாரணமாக உரை யாடினார். இதனிடையே ஒரு நாள் இந்துப் பத்திரிகையின் ஆசிரியர் ராம் வந்து கலாமைப் பேட்டி கணடு சென்றார். அன்றுதான் கலாம் புகழ் பெற்ற விஞ்ஞானி என்பதை நான் தெரிந்துகொண்டேன்.

எனது வியப்பையும் மகிழ்ச்சியை யும் கண்ணுற்ற கலாம், மாமன்மார் களாகிய நீங்கள் காட்டிய வழிகாட் டல் காரணமாகவேதான் இவ்வள விற்கு உயர முடிந்ததெனக் கூறினார்.

தாங்கள் எவ்வகையில் வழிகாட் டினீர்கள் எனக் கேட்டதற்கு, சிறுவய தில் கலாமுக்கு அடித்துமிருக்கிறேன். அந்த வேளையில் எங்கள் வீட்டுக்கு அருகிலிருந்த பொதுக்கட்டடமொன் றில் இளைஞர்கள் கூடி பலவித பொழுதுபோக்குகளில் ஈடுபடுவர். ஒரு சமயம் கலாம் சூது விளையாட்டை அவதானித்துக் கொண்டிருந்ததைக் கண்டு தான் அவரை அவ்விடத்தை விட்டு விரட்டி அடித்தேன் என நினைவு கூர்ந்தார். இந்தச் சம்பவம் கடைசிவரை கலாமுக்கு நினைவிருந் தது. ராம் வந்து பேட்டியெடுத்துச்



இப்ராஹிம் மரைக்கார்

சென்றதினம் கலாம் அப்பழைய நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டதோடு, நான் முன்னர் குறிப்பிட்டவாறு நீங் கள் கண்டித்து வழிகாட்டிய காரணத் தாலேதான் தான் இவ்வகை உயர்ச்சி பெற்றேன் எனக் குறிப்பிட்டார்.

டாக்டர் கலாமின் சிறுபராயம் பற்றி நாம் வினாவியபோது பிள்ளை களுக்கு கல்வி கற்பிக்க இயலாத வறுமைநிலை குடும்பத்தில் நிலவி யது. ஆரம்பத்தில் சிறு பாடசாலை யொன்றில் கல்விகற்ற கலாமின் திறமையைக் கண்டு, தான் வேண்டிக் கொண்டபடி ராமநாதபுரம் சுவாட்கை மேல்நிலைப் பள்ளியில் கல்வி கற்க ஒழுங்கு செய்தனரெனவும், அவரது படிப்புத் திறனைக் கண்டுகொண்ட கல்லூரி அதிபர் இவரைப் பாளையங் கோட்டை உயர்நிலைப் பள்ளியில் கல்விகற்க அனுப்பிவைக்க வேண்டு மெனக் கூறியதாகவும் தெரிவித்தார் இப்ராஹிம் மரைக்கார்.

கலாம் ஓர் இஸ்லாமியரான போதும், திருக்குர்ஆன் போன்றே பைபிளையும், பகவத் கீதையையும் தினமும் வாசித்ததோடு, அவற்றின் சிறப்புகள் பற்றிப் பேசும் ஒரு விஞ் ஞானியாவார்.

## மாந்நார் தோட்டத்திலிருந்து...

இதுபற்றி இப்ராஹிம் மரைக்காய ரின் அபிப்பிராயத்தை நாம் கேட்ட போது அது பற்றி தமக்கு விவரம் தெரியவில்லையெனக் கூறிய அவர், பிறிதொரு தகவலைத் தெரிவித்தார்.

ராமேஸ்வரத்தில் உள்ள இராம தீர்த்தக்கரை, இலட்சுமணதீர்த்தக் கரை ஆகிய இந்துக்களின் புனித வழிபாட்டுத் தலங்களைத் தரிசிக்கக் கூடும் யாத்திரிகர்களை ஓரிடத்திலி ருந்து மற்ற இடத்துக்கு படகுகள் மூலம் அழைத்துச் செல்லும் தொழி லைக் கலாமின் குடும்பத்தினர் மேற் கொண்டிருந்ததாகவும், ஒரு சமயம் இந்து யாத்திரிகர்களை ஏற்றிச சென்ற படகு விபத்தில் சிக்கி நீரில் மூழ்கிய போது முஸ்லிம் இனத்தவர்களே அந்த யாத்திரிகர்களைக் காப்பாற்றிய தாகவும் கூறினார். அதற்கு நன்றி தெரி விக்கும் விதத்தில் அதன் பின்னர் இந துக்களின் பூஜை வழிபாடுகளில் முஸ்லிம் மக்களுக்காகவும் விசேட வழிபாடுகள் செய்யும் வழக்கம் கடைப பிடிக்கப்பட்டது. இவைகள் தன் நினை வில் பதிந்திருப்பதனால், கலாம் மற்றச் சமயங்களின் சிறப்புக்களைக் கௌரவிப்பது தனக்கு ஆச்சரியம் தரும் செய்தியல்ல என இப்ராஹிம் குறிப்பிட்டார்.

மேலும் இப்ராஹிம் மரைக்காய ரது கருத்துப்படி அப்துல் கலாம் சிறுவயது முதல் வாசிப்பதில் வேட்கை கொண்டவராயிருந்தாரெனவும், தனக்கும் வாசிக்கும் ஆர்வம் மிகுந் திருந்தமையால் தம்மிடையே நெருக் கம் மிகுந்திருந்ததெனவும் கூறிய அவர், தாமிருவரும் புத்தகங்களை வாசிப்பதில் ஒருவரோடொருவர் புத்த கங்களைப் பரிமாறிக் கொண்டதாக



இந்திய ஜனாதிபதி

வும், ஒரு காலகட்டத்தில் கமியூ னிசச் சித்தாந்தங்களால் தாம் இரு வரும் கவரப்பட்டிருந்ததாகவும் குறிப பிட்டார்.

"நாம் எஸ்.டீ.ஆர்.மாணிக்கம் எழுதிய புத்தகங்களை விரும்பி வாசித் தோம். கமியூனிச இலக்கியத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளி யிட்ட சுவாமிநாத சர்மாவின் புத்த கங்களும், பிரசாரங்களும் எம்மைக் கவர்ந்தன. கலாம் கவிதைத் துறை யில் ஈடுபாடும் திறமையும் பெற்ற மைக்கு இவையே காரணமாகின" இவ்வாறு இப்ராஹிம் மரைக்கார் குறிப்பிட்டார்.

அக்காலத்தில் வாழ்ந்த சேர்லி என்ற பிரித்தானியக் கவிஞரின் மொழிபெயர்ப்புக் கவிதைகளை விரும்பி வாசித்தமையால் கலாம் சங்கீதத்துறையில் ரசனையுடைய வராக நேர்ந்தது எனவும் இப்ராஹிம் மரைக்கார் விவரமளித்தார்.

நீங்கள் இந்த வட்டகையின் பலம்மிக்க நாடொன்றின் ஜனாதிபதி யின் மாமனார் என்ற விவரம் சிலா பப் பகுதி மக்களுக்குத் தெரியுமா? என நாம் கேட்டபோது தாம் புகழ் பெற்ற ஏவுகணை விஞ்ஞானியின் உறவினர்கள் என்பது நீண்டகாலமா கவே அப்பகுதி மக்களில் பலருக் குத் தெரிந்திருக்கிறதென்றும், கலா மின் புகழைப் பாவித்து பிரசித்தம் பெறத் தாங்கள் விரும்பாத காரணத் தால் அந்தத் தகவலுக்கு முக்கியத் துவம் கொடுத்துத் தாம் பேசிக் கொள்வதில்லையென இப்ராஹிம் மரைக்காயரது மருமகள் கூறினார்.

பிருதிவி, அக்னி, நாத், திரிசூழ், ஆகாஸ் போன்ற ஏவுகணைகளைத் தயாரித்ததன் மூலம் பிரபல்யம் பெற்று, இப்போது உலகில் இரண்டாவது ஆகக்கூடிய சனத்தொகை கொணட நாட்டின் ஜனாதிபதியாக அப்துல் கலாம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக இப்ராஹிம் மரைக்காரின் குடும்பத்தி னர் வாழ்த்துச்செய்தி எதுவும் அனுப்ப வில்லை.

"நீங்கள் கலாமுக்கு ஏன் வாழ்த் துத் தெரிவிக்கவில்லை" எனக் கேட்ட போது,

"நாம் அது பற்றிச் சிந்திக்காமல் இல்லை. ஆனால், அப்படி வாழ்த்துத தெரிவிப்பதை கலாம் எவ்வாறு எடுத் துக்கொள்வார் என்பதே பிரச்சினை. சாதாரண சமூக நிலையிலுள்ள எமது வாழ்த்துச் செய்தி அதியுயர் பதவி பெற்றுள்ள எமது உறவினரான கலாமுக்கு கௌரவக் குறைவை ஏற்படுத்திவிடக்கூடாதே எனத் தயங் குகிறோம்" எனக் கூறினார்கள் இப்ரா ஹிம் மரைக்கார் குடும்பத்தினர். ★

# மிதிவெடியில் சிக்கிக் காயம்!

விறகு வெட்டச் சென்றவர் மிதி வெடியில் அகப்பட்டு இடதுகால் பாதத்தை இழந்துள்ளார். அத்தோடு அவரது வலது காலிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் வடமராட்சியில் உள்ள முள்ளி என்ற இடத்தில் படையின ரால் கைவிடப்பட்ட காவலரணுக்கு அண்மையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. துன்னாலை வேம் படியைச் சேர்ந்த சிவலிங்கம் சிவா கரன் (வயது - 24) என்பவரே இவ் வாறு காலை இழந்தவராவார். இவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார். (ஓ-182)

# சமாதான முயற்சிகள் வெற்றிபெற பல்கலை.அலுவலர் ஒன்றியம் ஆதரவு

## மத்திய குழுக்கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு பூரண ஆதரவு வழங்குவதென அனைத்துப் பல்கலைக்கழகங்களின் நிறைவேற்று அலுவலர் ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் மத்திய குழுவின் மூன்றாவது கூட்டம் கடந்த சனியன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

ஜயலத் முத்தெட்டுவ கெதிர தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டை நாம் ஏற்கின்றோம். நாட்டில் சமதா்ம சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்பிட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தை வரவேற்கின்றோம் என ஒன்றியச் செயலாளர் எம்.எம்.விமலசிறி தனது உரையில் தெரிவித்தார்.

இதேவேளை -

மேற்படி ஒன்றியத்தின் செயற்பாடுகளை ஒன்றிணைப்பதற்கென யாழ்,கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்பாளராக கிழக்குப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இரா.இராஜேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். (எ)

# அஞ்சல் தின நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.8

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை வட மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி அலுவலகத்தில் காலை 9மணி முதல் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இலங்கை வங்கியின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக வங்கியின் பிராந்திய முகாமையாளர் சி.நடராசலிங்கம் கலந்துகொள்வார்.

கொடியேற்றல் மற்றும் சிறப்புரைகளைத் தொடர்ந்து மாகாண ரீதியாக இடம்பெற்ற கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி மற்றும் முத்திரை சேகரித்தல் ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும் அதேநேரம் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தபால் நிலையங்களிலும் மரக்கன்று கள் நடுகை செய்யப்படும்.

கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் முத்திரை சேகரித்தல் ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:

**கட்டுரை**

கனிஷ்ட பிரிவு: ஆர்.மோகனப்பிரியன் (முதலாமிடம் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி) இவர் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

சிரேஷ்ட பிரிவு: எம்.டனோபைரான் (இரண்டாமிடம் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஜெராலின் தனுசியா ஜோன்பிள்ளை (மூன்றாமிடம் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி).

**கட்டுரை - ஆங்கிலம்**

கனிஷ்ட பிரிவு: கார்த்திகா சக்திவேல் (முதலாமிடம் - பருத்தித்துறை, மெதடிஷ்த பெண்கள் கல்லூரி).

**ஓவியம்:**

கனிஷ்டபிரிவு: ஜெயராசா நதீஸ் (முதலாமிடம் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி) தங்கமோகன் ராஜ்குமார் (மூன்றாமிடம் - ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி).

சிரேஷ்ட பிரிவு: முருகையா நிஷாலினி (இரண்டாமிடம் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**முத்திரை சேகரித்தல்**

செல்வி எஸ்.சுவேந்திரா (முதலாமிடம் - புற்றளை ம.வி.) மாதுங்க ஜீவபாலன் (இரண்டாமிடம் - புற்றளை ம.வி).

போட்டியில் வெற்றிபெற்ற அனைவரையும் நாளை காலை 9 மணிக்கு நிகழ்வில் கலந்துகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி என்.ஜெயரத்தினம் அறிவித்துள்ளார். (எ-10)

### மருதங்கேணியில் 10 பொதுக்கிணறுகள் அமைக்கப்படும்

மருதங்கேணிப் பிரதேசத்தில் 10 பொதுக்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

'லங்கா சேவா' நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

வெற்றிலைக்கேணியில் 5 பொதுக்கிணறுகளும், கட்டைக்காட்டில் 5 பொதுக்கிணறுகளும் இவ்வாறு அமைக்கப்படவுள்ளன.

மேற்படி பகுதிகளில் உள்ள பல கிணறுகள் கடந்தகால யுத்த அனர்த்தத்தினால் சேதமடைந்தும், பாவிக்க முடியாத நிலையிலும் உள்ளமையினால், மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நன்மை கருதி இப்பொதுக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. (எ-182)

### மினிபஸ்களுக்கு நேரக் கட்டுப்பாடு

கொடிகாமம்,ஒக்.8

தென்மராட்சி மினிபஸ் சாரதிகளுக்கு நேரக் கட்டுப்பாட்டு நடைமுறை கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுப்பாடானது கொடிகாமம்-சாவகச்சேரி இடையே 20 நிமிடமும் சாவகச்சேரி-யாழ்ப்பாணம் இடையே 40 நிமிடமும் பயண நேரமாக விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரக்கட்டுப்பாட்டுக்கு உட்படாத மினிபஸ்களுக்கு தாமத மாகும் 5 நிமிடத்திற்கு 5 ரூபாவும் மேலதிகமான நிமிடங்களுக்கு 10 ரூபாவும் தண்டமாக அறவிடப்படும் என தென்மராட்சி சிற்றூர்திச் சங்கம் அறிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

### சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கம் சொந்த இடத்தில்

தென்மராட்சி,ஒக்.8

சாவகச்சேரி பெரிய அரசடி தாமோதரம்பிள்ளை வீதியில் தனியார் கட்டடமொன்றில் இயங்கிவந்த சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், கிராமிய வங்கி பொதுக் களஞ்சியம் ஆகியவை நாளை புதன்கிழமை தொடக்கம் சாவகச்சேரியில் உள்ள சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளன.

யுத்த அனர்த்தங்களால் சங்கத்தின் கட்டடங்கள் சேதமடைந்த போதிலும் அவற்றின் ஒரு பகுதி திருத்தப்பட்டு மீள இயங்கவுள்ளதாகவும் ஏனைய பகுதிகள் திருத்தம் செய்வதற்கு 20 லட்சம் ரூபா செலவாகுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

யுத்த அனர்த்தங்களால் சங்கத்தின் கட்டடங்கள் உட்பட விற்பனைப் பொருள்கள் அழிவுற்றதால் சுமார் மூன்று கோடி ரூபா நட்ட மேற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# குப்பை கூழங்களால் குருநகர் மேற்கில் சுகாதாரச் சீர்கேடு

குருநகர்,ஒக்.8

யாழ்.மாநகர சபையினால் தினமும் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் குருநகர் கிராமத்தின் மேற்குப் புறமாக அமைந்துள்ள ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையை அண்டியுள்ள பெரிய வெளியில் கொட்டப்படுவதால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஜே/69 கிராமிய சமுர்த்தி செயலணி, மாநகர ஆணையாளருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குருநகர் மேற்குக் கிராம சேவகர் பிரிவில் குடியிருப்புக்கள் நெருக்கமாகவும் மக்கள் செறிவாகவும் வாழ்கின்றனர். இப்பகுதி மக்களது குடியிருப்புக்களூடாகச் செல்லும் வடிகால்களிலும் குப்பை கூழங்களும் கழிவுப் பொருள்கள் தேங்கி நிற்கும் நிலை அடிக்கடி ஏற்படுகின்றது.

மேலும், கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதனாலும், நீர் தேங்கி நின்று வடிகால்களில் குப்பை கூழங்கள் தேங்குவதனாலும், இவைகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புப் பெருக்கமும் ஏனைய கிருமிகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளன. இதனால் பொதுமக்களும் சிறுவர்களும் அடிக்கடி நோய்க்கு இலக்காகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இம்மக்களை நோய்களில் இருந்து காப்பாற்ற வடிகால்களை கிரமமாக சுத்திகரிப்புச் செய்வதுடன், மருந்து தெளிப்பதுடன் நின்றுவிடாது குப்பைகூழங்களை அகண்ட வெளியில் கொட்டுவதையும் உடன் தடுத்து நிறுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்.அரச அதிபர், யாழ்.பிரதேச செயலர், சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம் மற்றும் யுனிசெப் நிறுவனம் ஆகியவற்றின் பிரதேச ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களுக்கும் இம்மகஜரின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-51)

### மருதடியில் நாய்களால் தொல்லை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயச் சூழலில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆலய வீதிகளையும் மண்டபங்களையும் இவை அசுத்தப்படுத்துவதுடன் வழிபடவரும் அடியார்களுக்கும் தொல்லை விளைவிக்கின்றன. இந்தக் கட்டாக்காலி நாய்களை இல்லாதொழிப்பதற்குரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோருகின்றனர். (ஒ-90)

### சீரற்ற வீதியால் மக்கள் அவதி

கோண்டாவில் சந்தியிலிருந்து இருபாலை நோக்கிச் செல்லும் கோண்டாவில் - இருபாலை வீதி மிகவும் மோசமான நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

நீண்ட காலமாகக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் இவ்வீதியினால் பயணிப்போர் சிரமத்தை எதிர்கொள்வதை அவதானிக்கமுடிகிறது.

மேற்படி வீதியிலேயே கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் மகா வித்தியாலயம் போன்றவை அமைந்துள்ளமையால் சனநடமாட்டம் அதிகமுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-69)


## முகாமை நோக்கு சஞ்சிகை இதழ் - 07 வெளியீட்டு விழா

*இடம்:* முகாமைத்துவ மண்டபம் III
*காலம்:* நாளை (09.10.2002) புதன்கிழமை
*நேரம்:* மாலை 2.30 மணி

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

முகாமைத்துவ மாணவர் மன்றம்
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
யாழ்ப்பாணம்.

(9188)



## பாராட்டி வாழ்த்தும் நன்றி கூறலும்

யா/புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி



**செல்வி மதனசேகர் ஆர்த்திகா**

அவர்கள் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை 2002இல் 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவருக்குக் கல்வி புகட்டிய அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைக் கூறி, அவர் மேலும் கல்வியில் சிறப்புற வாழ்த்துகிறோம்.

அப்பா, அம்மா, அக்கா அர்ச்சிகா,
அண்ணா அபிஷேக், அம்மப்பா,
அம்மம்மா, அப்பம்மா, சித்தி, அகிலன்மாமா
மாமாமார், அத்தைமார் மற்றும்
உறவினர், நண்பர்கள்.

*கிளாக்கர் வீதி,*
*அச்சுவேலி.*

(9187)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியையரன
திருமதி க.மகாலிங்கசிவம் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி பார்வதிநாதசிவம் பரமேஸ்வரி**

அவர்களது மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (C/24123) - நலன்புரிச் சங்கம்.



## தேசிய சேமிப்பு வங்கியின் கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

| | |
|---|---|
| ☆ நிலையான வைப்புக்கள் | |
| 24 மாத வைப்பு | 10.5% |
| 12 மாத வைப்பு | |
| (i) வருட வட்டி | 10% |
| (ii) மாத வட்டி | 9.6% |
| 06 மாத வைப்பு | 9.8% |
| 03 மாத வைப்பு | 9.6% |
| ☆ சேமிப்புக் கணக்குகள் | |
| "ஹப்பன்/புஞ்சி ஹப்பன்" கணக்குகள் (16 வயதிற்கு உட்பட்டோருக்கான கணக்கு) | 7.8% |
| "இத்துரு மித்துரு" சேமிப்புக் கணக்கு (ரூ.5000/=இற்கு மேற்பட்ட வைப்பு) | 7.3% |
| "இத்துரு மித்துரு" சேமிப்புக் கணக்கு (ரூ.5000/=இற்கு உட்பட்ட வைப்பு) | 6.8% |
| "ஸ்திரி" பெண்களுக்கான சேமிப்புக் கணக்கு (ரூ.10,000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு 2% போனஸ் உண்டு) | 6.3% |
| சாதாரண சேமிப்புக் கணக்கு | 6.3% |

ஏதாவதொரு சேமிப்புக் கணக்கில் 31.12.2002ஆம் திகதிக்கு முன்னர் ரூ.25,000/= அல்லது அதன் மடங்குகளில் வைப்புச் செய்து 6 மாதங்களுக்கு அதனை மீளப்பெறாவிடின் ரூ25,000/= இற்கு ஓர் இலக்கம் என்ற அடிப்படையில் அவர்கள் சீட்டிழுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

*முதலாம் பரிசு* ரூ.50 லட்சம் பெறுமதிவாய்ந்த அழகிய வீடு
*இரண்டாம் பரிசு* ரூ.5 லட்சம் பணப்பரிசு
*மூன்றாம் பரிசு* ரூ.50,000 வீதம் 5 பேருக்கு

NSB உங்கள் குடும்ப வங்கி (சி-24121)

முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம்.

# வேலையற்ற பட்டதாரிகளை உருவாக்க ஒரு பல்கலைக்கழகம் தேவைதானா?

'எதற்காக நான் இளம் மாணவர்களைச் சந்திக்க வேண்டும்? இதற்கு விடைகாண எனது மாணவப் பருவ நாள்களுக்குப் பின்னோக்கிப் பயணமானேன். இராமேஸ்வரம் தீவிலிருந்து தொடங்கிய அந்தப் பயணம் எத்தனை பெரும் பயணம் பின்னோக்கிப் பார்க்கும்போது அனைத்துமே முற்றிலும் நம்பமுடியாதவையாகத்தான் தோன்றுகின்றன. இதையெல்லாம் நிகழ்த்திக் காட்டியது எது? கடும் உழைப்பா? இலட்சிய வேட்கையா? பல விடயங்கள் என்மனதில் வட்டமிடுகின்றன. எல்லாவற்றையும்விட முக்கியமானதாக ஒரு விஷயம் உண்டு. என்னுடைய அருகதையின் மதிப்பை, எனது பங்களிப்பைக் கொண்டே எப்போதும் எடைபோட்டுப் பார்க்கின்றேன். வாழ்க்கையின் அருமையான விஷயங்களையும், இறைவன் அருள்கின்ற அனு




கூலங்களையும் அநுபவிப்பதற்கான தகுதிகொண்டவர்கள் நாம் என்பதை நாம் நிச்சயமாக அறிந்துகொள்ள வேண்டும். இந்த அறிதல்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படையான விடயம்' அணுவிஞ்ஞானியும் இந்தியாவின் ஜனாதிபதியுமாகிய கலாநிதி அப்துல் கலாம் தனது 'Ignited Minds' (சிந்தனை உந்துதல்) என்ற நூலில இவ்வாறு குறிப்பிடுகின்றார். கலாநிதி அப்துல்கலாம் இந்திய ஜனாதிபதியாக ஆவதற்கு முன்னர் இந்திய இளைய சிற்பிகளான இளைஞர், யுவதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்மூலம் படைப்பாற்றலும் உற்பத்தித்திறனுமுள்ள மனிதவள ஆளணியினை உருவாக்க விரும்பினார்.

எமது தமிழ் மண்ணில் பௌதிக வளக் கட்டமைப்பில் அடங்குகின்ற மனிதவள ஆளணியினரில் - ஒரு பகுதியினராகிய அறிவுஜீவிகளை - உருவாக்குகின்ற நிறுவனங்களில் பல் கலைக்கழகங்களும் அடங்குகின்றன. இயல்பான அறிவுஜீவிகளைத் தவிர கல்விப் பயிற்சிமூலம் உருவாக்கப்படுகின்ற அறிவுஜீவிகளை வளர்முக நாடுகளில் அரச பல்கலைக்கழகங்களே உருவாக்கின்றன. இந்தவகையில் மேற்படி நோக்கத்தை நிறைவேற்றுவதில் இங்குள்ள பல்கலைக்கழகங்கள் எந்தளவிற்கு கரிசனம், பொறுப்புணர்ச்சியுடன் தம் கடமைகளை ஆற்றியுள்ளன என்பது விவாதத்துக்குரியதே.



தமிழர்களின் பல்கலைக்கழகமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெள்ளிவிழாக் கொண்டாடிய நிலையில், எமது தேசத்தின் நிர்மாண அபிவிருத்தியில் அதன் பொருளாதாரத்தில், விவசாயத்தில், கால்நடை சார்ந்த துறைகளில், மீன்பிடியில், அரசியலில், முகாமைத்துவத்தில் செய்த நன்மாற்றங்கள் எவை என்பதற்குரிய வினாவிற்குப் பதிலளிப்பது சிரமமாகவே இருக்கும்.

வருடாந்தம் "கப் கலெக்ஷனுடன்" கோலாகலமாக நடந்தேறுகின்ற யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவும் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இப்பட்டமளிப்பு விழாவின் முடிவில் சில நூறு பட்டதாரிகள் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் அங்கத்தினராவதோடு ஏற்கனவே உள்ள வேலையற்ற பட்டதாரிகள் என்ற பெரும் படையில் உறுப்புரிமை பெறும் தகுதி மட்டுமே அவர்களுக்கு உடன் கிடைக்கும் பரிசாக அமைகிறது. பட்டமளிப்பு விழாவுடன் தங்கள் பணி முடிந்துவிட்டதென கல்விமான்கள் எண்ணுகின்றனர். ஒரு பாடசாலையில் இருந்து அப்பாடசாலையின் நல் விளைபொருள்களாக இளைஞர், யுவதிகள் பல்கலைக்கழகத்தினுள் புகுகின்றனர். இவர்களுக்கு நான்கு அல்லது மூன்று ஆண்டுகள் தாம் வழங்கிய உயர் கல்விப் பயிற்சியால் அவர்களை சிறந்த சிந்தனையாளர்களாக, புவியியலாளர்களாக, விஞ்ஞானிகளாக உருவாக்கியுள்ளோமா என இந்தக் கல்விமான்கள் ஒரு நிமிடமாவது சிந்திக்கிறார்களா? என்பது ஐயமே.

சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் தம் பணியின் உன்னதம் மற்றும் முக்கியத்துவம் அறிந்து கருமம் ஆற்றவேண்டும் என்பதுடன் நாளைய தமிழ் இனத்தை ஒரு சுபீட்சமானதாகவும், பொருளாதார சமூக விவசாய விஞ்ஞான அபிவிருத்தியில் தன்னாதிக்கமுள்ளதாகவும் மாற்ற கல்வியியலாளர்கள் இனியாவது செயலாற்றுவார்களா என்பதே தமிழினத்தின் ஆதங்கமாக உள்ளது.

மாணவர்கள் சக்தி மகத்தான சக்தி. இவர்களின் அளப்பரிய சக்தி வழிகாட்டுதலின்றி அழிந்திருக்கின்றது. பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளை பாமரமக்களுட்பட சகலரும் அறிந்துகொள்ளவேண்டியது இனத்தின் வளர்ச்சி நோக்கிய பாதையில் அவசியமானதாகும்.

இன்று மருத்துவபீட பட்டதாரிகளைத் தவிர ஏனைய பெரும்பாலான பட்டதாரிகள் அனைவருக்கும் ஆசிரியத் தொழிலே வரப்பிரசாதமாக ஜீவனோபாயத்திற்கு அமைந்துள்ளமை கண்கூடு.

ஏனைய பயற்சிக் கல்லூரிகள், கலாசாலைகள் மூலம் ஆசிரியர்கள் உருவாக்கப்பட, வெவ்வேறு குறிப்பிட்ட துறை சார்ந்து சிறப்புக் கல்வியை முடித்த பட்டதாரிகளும் ஆரம்ப ஆசிரியராக முட்டிமோதுவது குறித்து பல்கலைக்கழகம் ஆராயத் தயங்குவது ஆச்சரியத்துக்குரியதே.

தேச நிர்மாணத்தில் உதவாத வெறும் ஏட்டுப்படிப்புடனான பட்டதாரிகளை உருவாக்குகின்ற இப்பல்கலைக்கழகமும், அதன் பாடவிதானத்தைப் பயின்ற மாணவர்களும் எமது தேசத்தின் - அதன் சமூகத்தின் - அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடிந்துள்ளதா? என்பது நோக்கற்பாலது. இப்பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளில் பெரும்பாலானவர்கள் இம்மண்ணை விட்டு வெளியேறத் தருணம் பார்த்தவண்ணமேயுள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

நீண்ட கொடிய யுத்தத்திற்கும், அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, மருந்துள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு என்பவற்றிற்கு மத்தியில் - மக்களின்-நாட்டின் அவசியத் தேவையை அனுசரிக்காது பொருத்தமில்லாத பாடவிதானத்தை உள்வாங்கி வலிந்து உட்செலுத்தி புலமையாளர்கள் என்ற போர்வையில் பட்டதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

ஆராய்ச்சி நோக்கியமையாத வெறும் மனனம் செய்யும் ஆற்றலை அல்லது திறமையை மதிப்பிடும் பரீட்சைகளின் மூலமாகவே மாணவர்கள் பட்டதாரிகள் ஆக்கப்படுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் அப்பால், பட்டங்கள் இல்லாத பல இளைஞர், யுவதிகள் வெற்றிநடை போட்டு சாதனைகள் படைத்ததை வரலாறு உரைக்கின்றது.

பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கற்கைகளை வெவ்வேறு துறைகளில் மேற்கொள்வோர் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை சமர்ப்பிப்பது பாடவிதானத்தில் ஒரு பகுதித் தேவையாக உள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து இதுவரை வெளியேறிய பட்டதாரி மாணவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் முடிவுகளில் ஒன்றாவது மக்களைச் சென்றடைந்து அவர்களுக்கு நன்மை பயத்துள்ளதா என்பது சிந்தனைக்குரியதாகும். உண்மையில் இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளில் பெரும்பாலானவை ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளின் பிரதிகளாகவே அமைவது தமிழினத்தின் துரதிர்ஷ்டமேயாகும். அவை புள்ளியிடலை நோக்கி - அவ் ஆராய்ச்சிக் கட்டுரையின் மேற்பார்வையாளரை திருப்திப்படுத்தும் விதமாகவே - அமைந்துள்ளதையும் இதைப்பற்றி ஆராய்வோர் நன்கு புரிந்துணர்ந்து கொள்வர். இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளின் முடிவுகளால் சமூகம் பயனடைவதில்லை. மாறாக, இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளை விஞ்ஞான சங்கங்கள் வெளியிடுவதன் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் புள்ளிகளைப் பயன்படுத்தி பேராசிரியர்.பதவி பெறுவதற்கே பயன்பட்டுள்ளன. பதவிகளுக்கும் கதிரைகளுக்கும் ஆசைப்பட்டு சமூக அக்கறையின்றி பதவியில் நீடிக்கும் பேராசிரியர்களால் சமூகத்திற்கும் தேசத்திற்கும் என்ன பயன் என்று சமூகநலனில் அக்கறையுள்ளோர் சிந்திக்கவேண்டும்.

பல்கலைக்கழக உயர் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணப் பொருளாதாரம் கோயில் பொருளாதாரம் என வர்ணிக்கப்படுகின்றது. (1970களில் யாழ்ப்பாணப் பொருளாதாரம் தபால் பொருளாதாரம் Postal Economy) எனப்பட்டது. இதன் உண்மைத் தன்மை சம்பந்தப்பட்டவர்களுக்கே வெளிச்சம். அதாவது எமது பொருளாதாரம் வீணே கோயில் திருவிழாக்களில் செலவிடப்படுவதாக ஆதங்கப்படுகின்றார்கள். இவ்வாறு வீணே இதற்காக ஆதங்கப்படுவதால் ஒரு பிரயோசனமும் இல்லை. மாறாக எமது திருவிழாக்கள் வெளிநாட்டுப் பணம் இல்லாத காலத்தில் இதைவிட இன்னும் சிறப்பாக நடைபெற்றுள்ளதை பலரும் அறிவர்.

விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோரில் பெரும்பாலானவர்கள் தன்னிலை சார்ந்த சுயசார்புச் சிந்தனை உள்ளவர்களாகவும் புகழ்விரும்பிகளாகவும் தாம்சார்ந்த துறையில் தாமே மேதாவிகள் என எண்ணும் மனப்போக்குடையவர்களாகவும் விமர்சிக்கப்படுகின்றனர்.

எம் இனத்தின் துரதிர்ஷ்டமாக இத்தகையவர்களே இன்று முடிவெடுக்கும் கதிரைகளில் கொலுவிருக்கின்றனர். இவர்கள் எவ்வாறு எம் இளைஞர்களின் மீட்பாளர்களாக அவர்களைக் கல்விக் கடலில் கரை சேர்ப்பர்.

பட்டப்படிப்பை மேற்கொள்ளுகின்ற மாணவர்களில், டிப்ளோமா மற்றும் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொள்வோர் தமது பட்டப்படிப்பில் பகுதித் தேவையாக தத்தமது துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரை அல்லது திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட துறையில் நன்கு ஈடுபட்டு உளமார அனுபவித்துக் கற்றுப் புலமையாளர்களாகத் திகழவேண்டும் என்பதற்காகவே இந்தமுறை உருவாக்கப்பட்டது. ஆனால், யதார்த்தத்தில் மாணவர்கள் இதனை நுனிப்புல் மேயும் மந்தைகளாகவே செயற்படுகின்றனர்.

இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், மண்ணிலிறங்காது விவசாயப் பட்டதாரியாகவும் கடலில் இறங்காது மீன்பிடி டிப்ளோமாவும் பெறக்கூடியதாக உள்ளமை எமது பல்கலைக்கழகங்களில் மாத்திரமே சாத்தியம் என்று கூறலாம். எமது கற்கைநெறிகளும் அவற்றால் வழங்கப்படும் பட்டங்களும் எவ்வாறு உள்ளதெனில் நீச்சல் தெரியாத ஒருவன் நீச்சல் பற்றி எழுதிய கட்டுரைக்குத் தங்கப்பதக்கம் கிடைத்ததுபோல் உள்ளது.

ஆயினும், சமாதானத்தை நோக்கிய போராட்டம் தொடரும் வேளையில் -

எம்மின விடிவு அடிவானில் தோன்றும் சந்தர்ப்பத்தில் -

இனியாவது வேலையற்ற பட்டதாரிகளை வெளியில் அனுப்பாது யாழ்.பல்கலைக்கழகக் கல்விமான்கள் ஈழத்தமிழ்ச் சமுதாயத்தை விண்ணுக்கு உயர்த்தும் இளம் நெம்புகோல் அறிவு ஜீவிகளைப் பிறப்பிப்பாளர்கள் என்று நம்புவோமாக.

*நம்பிக்கைதானே வாழ்க்கை.* ✪

**திவீக்ஷணன்**

# தனிமனித வாழ்க்கையில் இன்றியமையாத தபாற்சேவை

**நாளை ஒக்ரோபர் 09ஆம் திகதி உலகெங்கும் சர்வதேச தபால் தினம் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

வெளியில் ஒட்சிசன் போன்று தனிமனித வாழ்வில் தபால் இன்றியமையாத பங்கை வழங்குகின்றது. சகல செய்திகளையும் தாங்கி தினமும் தபால் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் லட்சக்கணக்காக விநியோகிக்கப்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் இச்சேவையின் நோக்கம் உலகம் முழுவதும் பரந்துபட்ட தரமான வாடிக்கையாளர் சேவையை வழங்கி, இதன்மூலம் பொருளாதார, கலாசார பரிமாற்றத்தை வளர்த்தல் ஆகும்.

தொடர்பாடல் புரட்சி எங்கள் கதவிற்கப்பால் தேங்கியிருக்கும் பல தரப்பட்ட வளங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது. இப்புதிய பரிமாணங்களின் சேவையை நாம் தொடர்ந்தும் உள்வாங்குகின்றோம். தேசிய எல்லைகளை முடிவாக அன்றிப் புதிய சந்தர்ப்பங்களாகக் காண்கின்றோம்.

சர்வதேச தபால், தனது வாடிக்கையாளரால் பேசும் 6 ஆயிரத்து 800 மொழிகளூடாகத் தொடர்புகளை வைத்திருப்பது மட்டுமன்றி, உலகத்திலேயே மிகப் பெரிய மனிதப் பயன்பாட்டு வலைப்பின்னலை தன்னகத்தே கொண்டுள்ளது. பொருள்களையும், எண்ணங்களையும் பாதுகாப்பான செயற்றிறனுள்ளதும், சிக்கனமானதுமான வழியாக அனுப்புவதற்குத் தன்னை அர்ப்பணம் செய்துள்ளது. சிறியதோ, பெரியதோ வாடிக்கையாளரிடமிருந்து பெறும் பதில்மூலம் வணிகத்தை ஊக்குவிக்கின்றது. சர்வதேச மக்களுக்கு தனிநபர்கள் அல்லது மக்களது கலாசாரப் பரிசுகளை அது கொண்டு வருகின்றது. தபால் தமது எல்லைகளை விஸ்தரிப்பதன்மூலம் அறியாமைக்கு எதிரான ஆயுதமாக உள்ளது எனின் அது மிகையாகாது.

**இலங்கையில்**

சமீபத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் வடமாகாணத் தபால் சேவையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. முன்பு வாரத்திற்கு ஒருமுறை அஞ்சல் பொருள்கள் பெறப்பட்டன. தற்போது இரு தினங்களுக்கு ஒரு தடவை கிடைக்கின்றது. இதைத் தினமும் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. வெகுவிரைவில் இது சாத்தியமாகும். மேலும் 11 அஞ்சலகங்களுக்கு 'பக்ஸ்' வசதி கிடைத்துள்ளது. ரெலிக்கொம் இணைப்புக்கள் கிடைத்ததும் அவை செயற்படத் தொடங்கும்.

யாழ்.அஞ்சலகத்தில் 'தொடர்பு நிலையம்' ஒன்று சமீபத்தில் தொடர்பாடல் அமைச்சரால் திறந்துவைக்கப்பட்டது. மின்னஞ்சல் உட்பட பல வேறு சேவைகள் அங்கு வழங்கப்படுகின்றன. இது மட்டுமல்ல வடபிராந்தியத்திலுள்ள பல அஞ்சலகக் கட்டடங்களில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சகல வசதிகளையும் கொண்ட யாழ்ப்பாண அஞ்சலகக் கட்டட வளாகம் அடுத்த மார்ச் மாதத்தில் திறந்துவைக்கப்பட இருக்கின்றது.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாண மாவட்டங்களில் உத்தியோகத்தர் பற்றாக்குறையால் செயற்றிறனுடன் செயற்பட முடியவில்லை. இந்நிலை அடுத்த ஜூன் மாதத்திற்கு முன் மாறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வாரம் இரண்டு தடவைகள் அனுப்பப்பட்டு வந்த தபால் பொதிகள் தற்போது மூன்று தடவையாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெற்றிகரமான ஓர் அஞ்சற் சேவையை நடத்துவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சேவை தமது பூரண ஒத்துழைப்பை வழங்கிவருவது மெச்சத்தக்கது என்பது குறிப்பிடப்படல்வேண்டும்.

ஏற்கனவே இத்திணைக்களத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'எப்போதும் வாடிக்கையாளரை முதன்மைப்படுத்தும் நடவடிக்கை' வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. உயாதரமான - பாதுகாப்பான - நம்பிக்கைக்குரிய தபால் சேவையை வழங்குவதுடன், வாடிக்கையாளரது தேவைக்கும் விசாரணைக்கும் உடனடியான கவனம் செலுத்துகின்றது. வாடிக்கையாளர் திருப்தியே முக்கியமாகக் கருதப்படுகின்றது.

'தபாற்சேவை மக்களின் மகிழ்ச்சிக்காகவே' எனும் கோட்பாட்டுக் கிணங்க தபாற் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அயராது உழைத்து நாட்டு மக்களுக்கு நம்பகரமான, விரைவான, பாதுகாப்பான சேவையைத் தொடர்ந்தும் வழங்குவோம் என திடசங்கற்பம் பூணுவோம்.

**என்.ஜெயரத்தினம்**
**பிரதி அஞ்சல் அதிபர் (வடபிராந்தியம்)**

# கருவாடு தயாரிக்கும் பணி குருநகரில் மீண்டும் ஆரம்பம்

ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட்டு மீனவர்கள் இரவு பகலாக மீன்பிடியில் ஈடுபட்டுவருவதையடுத்து குருநகர்ப் பகுதியில் மீன்களை கருவாடுபோடும் தொழில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குருநகர் மத்திய மேற்குப் பகுதியில் உள்ள கடலை அண்டிய பகுதியில் புதிதாக கருவாட்டுக் கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மக்கள் இடம்பெயர்ந்து சென்றதனாலும், மீன்பிடிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதனாலும் மீன்களைக் கருவாடு போடும் வேலைகள் பல வருடங்களாக குருநகரில் நடைபெறவில்லை.

எனினும், ஒருசிலர் கருவாடுபோடும் தொழிலை குருநகரின் உட்குடியிருப்புப் பகுதியில் வைத்து செய்துவந்தனர். இதனால், கருவாட்டின் விலையும் உயர்வாகக் காணப்பட்டது.

தற்போது பல கருவாட்டுக் கொட்டில்கள் திறக்கப்பட்டு கருவாடுபோடும் வேலைகள் நடைபெற்று வருவதனால் கருவாட்டின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. (சு-51)

# பக்திச் சுவைமிகுந்த திருமுறைகள் இல்லங்கள்தோறும் ஓதப்படவேண்டும்

## சைவத் திருமுறை விழாவில் நாச்சியார் செல்வநாயகம்

சண்டிலிப்பாய்,ஒக்.8

தேவாரத்திருமுறைகள் தெய்வீகத் தன்மை வாய்ந்தவை. சைவத் தமிழ்மக்களின் அரும்பெரும் சொத்தான தேவாரத் திருமுறைகள் பற்றியும், சமய விழுமியங்கள் பற்றியும் எமது மாணவ சமுதாயம் அறிந்து செயற்படுவதற்கு இதுபோன்ற சைவத் திருமுறை விழாக்கள் பேருதவியாக அமையும்.

பக்திச்சுவையுடன் தேவாரங்களை இசைத்துப் பாடும் மரபு எமது இளம் சந்ததியினரிடம் இன்று குறைந்து வருவது கவலைக்குரியது. எமது மாணவர்களை நல்வழிப்படுத்தி சமயநெறியில் எதிர்காலத்தில் வாழ்வதற்கு பாடசாலைகளிலேயே அடிதளமிடப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம்.

சங்கானை கல்விக்கோட்டம் ஏற்பாடு செய்த சைவத்திருமுறை விழாவும், சைவநெறி தொண்டுபடு நிகழ்ச்சியும் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலையில் கடந்த சனியன்று நடைபெற்றன.

இந்த விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் பாடப்பட்ட சைவத் திருமுறைகள் தமிழ்மக்கள் வாழும் சகல இடங்களிலும், ஆலயங்களிலும் இன்றும் நிலைத்து நிற்பது அதன் தெய்வீகத்தன்மைக்குச் சான்றாகவுள்ளது.

சமயக் குரவர்கள் திருமுறைகள் மூலம் இறைவனைத் துதித்து தங்களுக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட இடர்களைக் களைந்ததுடன், அற்புதங்களையும் நிகழ்த்தினர் என்பது வரலாறு. பக்தி சுவையுடன்கூடிய தேவாரத் திருமுறைகள் சைவர்களின் இலங்கள்தோறும் தினமும் ஓதப்படவேண்டும். தமிழர் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் ஞானக் கருவூலங்களாகிய இவற்றைத் தினமும் ஓதுவதன் மூலம் எம்மை நாடிவரும் துன்ப, துயரங்களிலிருந்து மீட்சிபெறமுடியும் - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துகையில்:-

மாணவர்களுக்கு சமய வாழ்க்கை எது? என்பதை விளங்கவைத்து ஆன்மீகக் கல்வியை ஊட்ட வேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது. பாடசாலைக் கல்வியுடன் சேர்ந்து ஆன்மீக நெறிகளைக் கற்பிக்க ஆசிரியர்கள் முன்வரவேண்டியது காலத்தின் தேவையாகும். கல்வியோடு ஆன்மீகமும் சேர்ந்து தொடர்ந்துவரும்போது மனிதனைத் தெளிந்த ஒரு நிலைக்கு அது இட்டுச்செல்கின்றது.

சங்கானைக் கல்விக் கோட்டம் கடந்த ஆறுவருட காலமாக வருடம்தோறும் சைவத் திருமுறை விழாவை இப்பிரிவிலுள்ள பல பாடசாலைகளை இணைத்து சிறப்பான முறையில் நடத்தி வருவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அத்துடன் நம் சமயத்தின் நிலையை நெறிப்படுத்தும் நிகழ்ச்சியை மாணவர்களுக்கு பரீட்சைமூலமாக நடத்தி பரிசில்களை வழங்கி ஊக்குவித்து வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன் - என்றார்.

ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் ராஜ்குமார் ஆசியுரை நிகழ்த்தியதுடன் நூல்களையும் மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்தார்.

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலையில் ஓய்வுபெற்ற அதிபர் சி.கந்தையா, தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்புமலரை இந்து சமய கலாசார அமைச்சின் யாழ்.மாவட்ட உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம வெளியிட்டு வைத்து உரைநிகழ்த்தினார். விழா ஆரம்பமாவதற்கு முன்னர் பணிப்புலம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளை அடுத்து திருமுறைச் சுவடிகளும், சமயக் குரவர் நால்வரின் திருவுருவப்படங்களும் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டன.

(எ-135)

யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்

பழைய மாணவர் சங்க அபிவிருத்திக்கான

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 285 இரண்டாம் பரிசு இல.1866

மூன்றாம் பரிசு இல. 2866

ஆறுதல் பரிசு இலக்கங்கள் 322, 56, 3089, 562, 3343.

(9184) - பழைய மாணவர் சங்கம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



2002ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக

அல்வாய் வ/வ/மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை

மாணவன்

தர்மலிங்கம் யாதவன்

அவர்களை மேன்மேலும் கல்வியிலும் வாழ்விலும் புகழ்பூத்துப் பெருவாழ்வு வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

ஆகாஷ் மணப்பந்தல்,
அம்பிகை, அல்வாய். (9178)

அம்பிகைபாகன் அகிலன்

பருத்தித்துறை பிரதேச சபை

புத்தகக் கொள்வனவு

யாழ்.தேர்தல் மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் சனசமூக நிலையங்களுக்குப் புத்தகம் கொள்வனவு செய்வதற்கு, புத்தகம் வழங்கக்கூடிய விற்பனை நிலையங்கள் கீழ்வரும் புத்தகங்களுக்கான தங்கள் கூறுவிலையினை 16.10.2002ஆம் திகதிக்கு முன்னர் மூடிய கடித உறையில் அரக்கு முத்திரையிட்டு இடது பக்க மேல் மூலையில் புத்தகக் கொள்வனவு எனக் குறிப்பிட்டு *தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. இலங்கை வெளியீட்டுப் புத்தகம்
2. இலங்கை வெளியீட்டு பயிற்சிப் புத்தகங்கள்
3. இந்திய வெளியீட்டுத் தமிழ் புத்தகங்கள்
4. இந்திய வெளியீட்டுப் பயிற்சிப் புத்தகங்கள்
5. இந்திய வெளியீட்டு ஆங்கிலப் புத்தகங்கள்

16.10.2002ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குக் கூறுவிலைகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.

திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே.பி.யு.எம்.
தலைவர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

*பருத்தித்துறை பிரதேச சபை,*
*புலோலி.*
*03.10.2002* (C/24120)

## நூலகருக்கான பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஒக்.8

தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்க சேவைகள் சபையும் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களமும் இணைந்து நடத்தும் பொதுநூலகங்களுக்கான பயிற்சிநெறியில் "நூலகமும் தகவல் விஞ்ஞானமும்" என்ற விடயத்திலான நான்கு நாள் வதிவிட பயிற்சிநெறி எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை யாழ்மாநகர சபை பொதுநூலக மண்டபத்தில் நடைபெறும். (ஒ-69)

## விவசாய உபகரணம் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு,ஒக்.8

மருதங்கேணிப் பகுதி விவசாயிகளுக்கு 'லங்காசேவா' நிறுவனம் விவசாய உபகரணங்களை வழங்கியுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 217 விவசாயிகளுக்கே மண்வெட்டி, கோடரி, அலவாங்கு, கத்தி ஆகிய விவசாய உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. (எ-182)

## நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள்

வலி.தெற்கு,ஒக்.8

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் பத்து வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் நா.குழந்தைவேல் தெரிவித்துள்ளார்.

பத்துத் திட்டங்களுள் மூன்று உவர்தடுப்பு நீர்த்திட்டங்கள் யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினாலும், ஏனைய ஏழு திட்டங்களும் கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நவாலி வேடுவன்கண்ணிக் குள அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சி வகுப்பொன்றுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புகளில் யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.ஆனந்தராசா, நியாப் திட்டப் பொறியியலாளர் க.கருணாநிதி, உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

வேடுவன்கண்ணிக்குள அபிவிருத்தி வேலைகளை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் மேலும் பல குளங்களையும் அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் நா.குழந்தைவேல் தெரிவித்தார்.

நியாப் திட்டப் பொறியியலாளர் மேற்படி குள அபிவிருத்தி தொடர்பாக மண்கட்டு வேலை, கட்டினை பாதுகாக்கும் வேலை, கொங்கிரீட் அடித்தளம் அமைத்தல், கண்டகல் வேலை போன்றவற்றைப் பற்றி விளக்கமளித்தார். (ஒ-152)

# கட்டுவன் - மாசுவன் வீதியை பாவனைக்குத் திறந்துவிடுக

## படை அதிகாரியிடம் கோரிக்கை

வலி.கிழக்கு,செப்.8

அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்திற்குச் செல்லும் கட்டுவன் - மாசுவன் சந்தி வீதி போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படாமையால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதி மூடப்பட்டிருப்பதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் பல மீற்றர் தூரம் நடந்து பாடசாலை செல்லவேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை -

மேற்படி விடயம் தொடர்பாக பாடசாலை அதிபர் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியும் இதுவரை எந்தவிதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என கோப்பாய் கல்விக் கோட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-180)

## கணக்காளர் நியமனம்

வலி.தெற்கு,ஒக்.8

இலங்கைக் கணக்காளர் சேவையில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட அன்ரன் ஜேக்கப் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகக் கணக்காளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இச் செயலகத்தில் கடமையாற்றிய கணக்காளர் என்.இராசநாயகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ஒ-152)

மரண அறிவித்தல்கள்

V. இராஜேந்திரம் *(பொறியியலாளர்)*

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியில் வசித்தவரும் தற்போது லண்டனில் வசித்துவந்தவருமான V.இராஜேந்திரம் லண்டனில் சனிக்கிழமை (05.10.2002) அன்று காலமானார்.

அன்னார் மேரி மார்கிறட்டின் அன்புக் கணவரும் Dr.யோண் அன்னரட்ணம் (London), குணரட்ணம் (Accountant, U.S.A.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.மேரி உமாவின் (London) அன்பு மாமனாரும் மரியா, சங்கீதா, அமாலியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்கான திருப்பலி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (08.10.2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
திரு.R.E.ஆனந்தராஜா
(மைத்துனர்)

*பிறேமஸ்ரன்,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.* (9179)

நாகமுத்து மார்க்கண்டு

கோண்டாவில் மேற்கு, பாரதிவீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து மார்க்கண்டு அவர்கள் 01.10.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இதே இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (அண்ணா) - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் மற்றும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கோண்டாவில் பாரதி வீதியைச் சேர்ந்த முத்துப்பிள்ளை, காலஞ்சென்ற நடராஜா (முடவேம்படி, சுன்னாகம்) மற்றும் துரை (உரிமையாளர், இணுவில் தச்சுத்தொழிற்சாலை) ஆகியோரின் இளைய சகோதரரும் கௌரியம்மா, சிவஞானம் (உரிமையாளர், தர்சுகி தொலைத் தொடர்புசேவை - இணுவில்) திசைவீரசிங்கம் (ஜேர்மனி), நாகேஸ்வரி ஆகியோரின் மூத்த சகோதரரும் சின்னத்தம்பி, பரிமளம், செல்வமணி, சீவரத்தினம், இராசாத்தி, சுலோசனா (ஜேர்மனி), சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அரச ஊழியர், யாழ்.செயலகம்), இரட்ணசபாபதி, மலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சத்தியசீலன் (ஜேர்மனி), ஜெயசீலன் (ஜேர்மனி), தர்மசீலன் (பிரான்ஸ்), சத்தியவாணி (சுவிஸ்), சத்தியப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வளர்மதி (ஜேர்மனி), அஜந்தா (ஜேர்மனி), சுரேஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் கீர்த்தனா, சங்கர், சௌமியா (ஜேர்மனி), வானுசன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2002) புதன்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி வீதி,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*
*T.P: 077 7111404* (9177)

தகவல்:
சத்தியசீலன் (மகன்)

திருமதி நகுலேஸ்வரி குலசிங்கம்

*(லீலாவதி)*

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி குலசிங்கம் (லீலா) 06.10.2002 ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதியினரின் அன்பு மகளும் திரு.திருமதி நாகநாதர் கந்தையா தம்பதியினரின் அருமை மருமகளும் குலசிங்கத்தின் (குலசிபாபா என்ரப்பிறைசஸ், வெள்ளவத்தை) பாசமிகு மனைவியும் திலீபன் (ஆசிரியர் - கழுத்துறை), சுஜீவன் (லண்டன்), ஹர்சன் (விரிவுரையாளர், குயிக்டெக் அக்கடமி) ஆகியோரின் அருமைத் தாயாரும் கவிதாவின் (ஆசிரியை, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் பராசக்தி (சுவிஸ்), தேவராசா, பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நகுலாம்பிகை, நாகம்மா, காலஞ்சென்றவர்களான சின்னராசா, கேசவநாதர், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, தர்மலிங்கம் மற்றும் நடராசா ஆகியோரின் மைத்துனியும் விஜயலட்சுமி (சுவிஸ்), திருவிளங்கம் (லண்டன்), திருச்செல்வன் (சுவிஸ்), திருக்குமார் (சுவிஸ்), முருகதாஸ், கேமதாஸ் (நோர்வே), ரகுமார், சாந்தலிங்கம் (சுவிஸ்), ஜெயமனோகரன் (ஜேர்மனி), விஜயமனோகரன் (கனடா), சித்திரா, ரவிச்சந்திரன், ரஞ்சன் ஆகியோரின் சிறிய தாயாரும் வரதலட்சுமி (லண்டன்), தேவராணி (சுவிஸ்), ரதி (சுவிஸ்), கமலாம்பிகை, சிவம், ரூபன் (சுவிஸ்), ரூபா (லண்டன்), ராதா (மொஸ்கோ), வசந்தி (சுவிஸ்), ஈசன் (கனடா), இராஜேஸ்வரன் (சுவிஸ்), அகிலராணி, மகேஸ்வரன் (லண்டன்), இராஜேஸ்வரி ஜெயரட்ணம், பரமேஸ்வரி கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.10.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*575, காலி வீதி, வெள்ளவத்தை.*
*078-687042* (C/24122)

தகவல்:
என்.கே.குலசிங்கம்

பாடசாலைகளுக்கு இடையிலான

# தேசிய மெய்வன்மைப் போட்டி ஒரு நாள் பிற்போடப்பட்டது

தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் ஒருநாள் பிந்தி எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகவிருக்கின்றன என்று மத்திய கல்வி அமைச்சு நேறிரவு தகவல் அனுப்பியுள்ளதாக யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகி 13ஆம் திகதிவரை இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்றும்-

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதிமுதல் 14ஆம் திகதி வரை இடம்பெறும்மென தற்சமயம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் சொன்னார். (ம-3)

## ரயில் சேவைகள் இன்று வழமைக்குத் திரும்பும்

ரயில் சேவைகள் தாமதத்துக்குக் காரணமாக அமைந்த சுற்றறிக்கையை வாபஸ் பெறுவதென ரயில்வே திணைக்களம் தீர்மானித்திருக்கிறது. இதனையடுத்து ரயில் சேவைகள் இன்று வழமை நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரயில் சாரதிகளின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தும் இச்சுற்றறிக்கையை திணைக்களம் விடுத்தது.

அது முதல் ரயில் சேவைகள் பெரும் தாமதத்துக்கு உள்ளாகின. இதனால் அலுவலக ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு இலக்காகினர். (ம)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு ரூ.24ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருவருக்கு யாழ்நீதிமன்றினால் 24ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வேலணை வடக்கைச் சேர்ந்த குமாரசாமி ஜேம்ஸ் எஸ்ரனிஸ்லோஸ் என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபாத தர்மப்பணமும் -

திருநெல்வேலி, மணியம் வீதியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வரத்தினம் என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜாவினால் விதிக்கப்பட்டது. (ம-10)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.8

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ள மூன்றாம் இடம் மற்றும் இறுதியாட்டம் என்பவற்றில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

மூன்றாமிடம் - அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம் எதிர் புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.

இறுதியாட்டம் - உரும்பிராய் இந்துக்கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்

**18 வயதுப் பிரிவு**

★ மூன்றாமிடம் ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக்கல்லூரி.

★ இறுதியாட்டம் - அச்செழு சைவப்பிரகாச வித்தியாலம் எதிர் புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் (ம-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெறும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை அரியாலை கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலத்தில் காலை 8.30 மணிமுதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப்பிரிவு**

★ நாவாந்துறை றோ.க.த. பாடசாலை எதிர் யாழ்.சென் ஜோசெப் வித்தியாலயம்

**16 வயதுப் பிரிவு**

★ நாவாந்துறை றோ.க.த. பாடசாலை எதிர் யாழ்.சென்.ஜோசெப் வித்தியாலயம்.

பிற்பகல் 2.30 மணி முதல் யாழ். இந்து மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபெறும் அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

★ யாழ்.மத்தியகல்லூரி எதிர் புனித ஜேம்ஸ் ம.வி.

**16 வயதுப் பிரிவு**

★ புனித சாள்ஸ் ம.வி. எதிர் புனித ஜேம்ஸ் ம.வி.

**18 வயதுப் பிரிவு**

★ யாழ்.மத்திய கல்லூரி எதிர் புனித ஜேம்ஸ். ம.வி.

★ புனித சாள்ஸ் ம.வி. எதிர் கொழும்புத்துறை இந்து ம.வி.(ம-86)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.8

மானியூர் ரட்ணேஸால் ஆக்கப்பெற்ற கவிதைகள் மற்றும் ஓவியங்கள் அடங்கிய 'ஏணி' தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெறும். (ஒ-69)

# பல்கலை நிதிக் கிளையின் ஒத்துழையாமை தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்.பல்கலைக்கழக நிதிக் கிளையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒத்துழையாமை நடவடிக்கை இரண்டாம் நாளாக நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

பல்கலைக்கழக ஊழியர்களின் சந்தாகழிவு தொடர்பாக பல்கலைக் கழக நிதிக்கிளையினருக்கும், ஊழியர் சங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கடந்த 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஒத்துழையாமை நடவடிக்கை கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் இடைநிறுத்தி வைக்கப்பட்டது. பின் நேற்று அது இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

இது தொடர்பாக இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிதிக் கிளையினர் கருத்துத் தெரிவிக்கையில், எமது பிரச்சினை தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் தகுந்த பதில் தரப்படாதவிடத்து தமது நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெறும் என்றும் தெரிவித்தனர்.(ம-5)

## கலந்துரையாடல்

மரவள்ளங்கள் உற்பத்தி செய்வது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டிலுள்ள மரவள்ளச் சாலை உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கேட்டுள்ளார். (ம-5)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை
மாணவி
செல்வி
துவாரகா இரவீந்திரன்

அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 152 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதோடு, அவருக்கு அறிவூட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி அவர் மேலும் கல்வியில் பல சிறப்புக்களைப் பெறவேண்டுமென எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானைப் பணிந்து வாழ்த்துகிறோம்.

*கொக்குவில்.* - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



## WALK IN INTERVIEW
## POST OF LOGISTIC EXPERT FOR MOVIMONDO

மேற்படி பதவிக்குரிய தகைமைகள்

கல்வித்தகைமை :- Diploma in Agriculture/ Degree in Agriculture/ Degree in Management

★ பால் :- ஆண்

★ வயது :- 25-45 வயதிற்குள்

★ சாரதி அனுமதிப்பத்திரம், சுயவிவரக்கோவை, கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ்,

★ இவற்றுடன் ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்பவற்றில் புலமையும் மேற்படி பதவியில் ஒருவருட அனுபவமும், இலங்கையின் சகல பாகங்களுக்கும் சென்றுவரக்கூடியவராகவும் இருத்தல் அவசியம்.

★ வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு

காலம் :- 11.10.2002 வெள்ளிக்கிழமை காலை 10.00மணி முதல் மாலை 3.00 மணிவரை.

இடம் :- SARVODAYA,
District Centre,
No.3, fletehers Lane, Jaffna. (C/24125)


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் கு.திலீபன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி குலசிங்கம் நகுலேஸ்வரி

அவர்கள் 6.10.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
நான்காம் அணியினர் (96/99).
(9189)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது அலுவலகத்தில் தட்டெழுத்தாளராக கடமையாற்றும் திரு.இ.சண்முகதாஸ் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி இராசையா தங்கரத்தினம்

அவர்கள் 08.09.2002இல் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம், பளை.*

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.
(9191)


நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந் (இருவேடம்), மீனா, பிரபுதேவா நடித்த
வானத்தைப்போல
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-23810) (சினிமா)

ராஜா யாழ்ப்பாணம்.
மனோஜ், முரளி, பிரதியுக்ஷா நடிப்பில்
இந்திய ஜனாதிபதி விருதுபெற்ற
கடல்பூக்கள்
10.30, 2.30, 6.30
(C-24065)

நாகம்ஸ் சுன்னாகம்
M.G.R, ராதாசலுஜா நம்பியார் நடித்த
இதயக்கனி
(சினிமா)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(9181)


# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு கந்தையா

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தையா நேற்று (07.10.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நோமல் இமல்டாவின் அன்புக் கணவரும், சறோஜினி (இத்தாலி), சற்குருநாதன் (சவூதி), சற்குணநாதன் (கொழும்பு, கிறீன்ஸ்லன்ட் வங்கி முகாமையாளர்), சர்வேஜினி (கொழும்பு), சஜாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

*சண்டிலிப்பாய் வடக்கு.* (9194)
தகவல்: மனைவி

## வேலுப்பிள்ளை தயாளன்

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசிப்பவருமான வேலுப்பிள்ளை தயாளன் நேற்று (07.10.2002) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தா.வேலுப்பிள்ளை - இலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் கலைச்செல்வியின் அன்புக் கணவரும் சாரங்கியின் அன்புத் தந்தையும் மல்லாகத்தைச் சேர்ந்த திரு.திருமதி வேலாயுதபிள்ளையின் அன்பு மருமகனும் செல்லமுத்து, நாகேஸ்வரி, முத்துராசா, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் அருளானந்தம், நடேஸ்வரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேந்திராசா, இராமமூர்த்தி, பூமணிதேவி, விக்கினேஸ்வரி, தவமலர், கலாரஞ்சினி, மதியழகன், அறிவழகன், சங்கர், மலர்ச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருபாகரன், கிரிகரன், கருணாகரன், கஜேந்தினி, கஜேந்திரன், சத்தியேந்திரன், கஜீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மாதவி, துர்க்கா, சாம்பவி, தேனுகன், திவ்வியா, கௌசிகா, ஜீவிகா, பிரிந்தினி, கஜானி, கிஷானி, யதுனா, ஜனகன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் விசாகனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறுமென உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.* (9190)
தகவல்: வே.முத்துராசா (சகோதரர்)

## திருமதி மாணிக்கவாசகர் கனகேஸ்வரி

மண்கும்பான், 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கவாசகர் கனகேஸ்வரி நேற்று (07.10.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, சர்வேஸ்வரன் (கனடா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற செல்லப்பா மற்றும் தெட்சணாமூர்த்தி, ரூபி ஆகியோரின் மைத்துனியும் உதயசங்கர் (பிரான்ஸ்), லாவன்யா, விஜயசங்கர், சத்தியசங்கர், அனுசியா, லோகீசன், பார்த்தீபன், தினேஷன் ஆகியோரின் பெரியதாயும் கைலாசகுகனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2002) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*209/2, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (9196)
தகவல்: விஜயசங்கர்(மகன்)

## அன்ரனி கஸ்மீர் ஜோசப்

(இளைப்பாறிய சிறு கைத்தொழில் ஆசிரியர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் இல.115, சென்.பற்றிக்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி கஸ்மீர் ஜோசப் 5.10.2002 சனிக் கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியம்மா அந்தோனியாப்பிள்ளையின அன்புக் கணவரும் ஜோர்ச்(குவைத்), ஜோகரட்ணம்(கனடா), ஜோகராசா (ஜேர்மனி), சறோ(இந்தியா), புஷ்பம், புனிதம்(ஜேர்மனி), ராஜன், துரை (ஜேர்மனி), ஜெகா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ிராணி, பரமானந்தம், யோகம் மற்றும் வர்ணா(கனடா), யசோதா (ஜேர்மனி), யோகானந்தம்(இந்தியா), விஜயபாலன் (ஜேர்மனி), வவா, வசந்தி(ஜேர்மனி) , இந்து(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பஸ்ரி மற்றும் குட்டி(லண்டன்), சுவீற்றி, யசி(பிரான்ஸ்), அஜன்(கனடா),ஸ்ரீவ்(கனடா), அனுஷா(கனடா), ராஜா(இந்தாலி), யூட் (இத்தாலி), சஜீ(ஜேர்மனி), ரூபன்(லண்டன்), றூபினா(இந்தியா), செல்வரஜித், சதீஸ்குமார்(புனித மாட்டினார் குருமட மாணவன்), றொசான் (ஜேர்மனி), சுபீகரன்(ஜேர்மனி), அசோக், பிரதீபன், ஜெனி, நிலான், ரஜி, ரஜன்(ஜேர்மனி), நீரத்திகா(சுவிஸ்), ஜெனூசன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(08.10.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 115,சென்.பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (9197)
தகவல்: பிள்ளைகள்.

## பொலீஸ்மா அதிபர், இராணுவத்தளபதி இருவருக்கும் உத்தரவு

# ஈ.பி.டி.பி. அலுவலகத்தைத் தாக்கியோரை இரு நாள்களுக்குள் கைது செய்யுங்கள்!

## ஜனாதிபதி சந்திரிகா பணிப்பு

கொழும்பு,ஒக்ரோபர்8

**"ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி. அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து உடனடி விசாரணை நடத் துங்கள், சந்தேக நபர்களை இரண்டு நாள்களுக் குள் கைது செய்யுங்கள்!"**

**- இவ்வாறு இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பல கல்லவுக்கும் பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜாவுக்கும் உத்தரவிட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க.**

இராணுவத் தளபதிக்கும் பொலீஸ் மா அதிபருக்கும் தனித்தனியாக இரண்டு கடிதங்களை அனுப்பி வைத் திருக்கும் ஜனாதிபதி, ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் யாரும் இப் படி சட்டத்தை தங்கள் கைகளில் எடுப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. என்று அவற்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமது நெடுந்தீவு அலுவலகம் தாக்கப்பட்டதற்கு புலிகள் மீது ஈ.பி.டி.பி. குற்றம் சாட்டுவதாக ஜனாதிபதிக்கு தெரியவந்துள்ளது. ஈ.பி.டி.பியின் கூற்றுப்படி பருத்தித்துறை இராணுவ நிலை, வாழைச்சேனை பொலீஸ் மறியல் ஆகியவை தாக்கப் பட்ட பாணியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இந்தத் தாக்குதலை யும் நடத்தியுள்ளனர்.

அரசின் கோரிக்கைப்படி போர் முறையிலிருந்து ஜனநாயக வழிக்கும் திரும்பி தற்போது நாடாளுமன்றத் தில் அங்கம் வகிக்கின்றது ஈ.பி.டி.பி.

அதன் பாதுகாப்பை உறுதிப்படுத் துவது அரசின் முக்கிய பொறுப்பா கும்.

இது புலிகள் ஆயுதங்கள் தாங்கி யிருக்கும் நிலையில் ஈ.பி.டி.பியிடமி ருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருப் பதால் இன்னும் முக்கியத்துவம் பெறு கின்றது.

புலிகளின் கோரிக்கையின் பேரில் ஆயுதங்கள் களையப்பட்ட ஈ.பி.ஆர். எல்.எவ்., புளொட், ரெலோ போன்ற கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சி களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத் துவதும் அரசினது கடமை என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துச் சந்தேக நபர்களும் கைது செய்யப்படவேண் டும். அதுகுறித்து இரண்டு நாள்களுக் குள் அறிக்கை சமர்ப்பியுங்கள்- என்று பொலீஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனாதிபதி வலியுறுத்திருக் கின்றார்.

- இப்படி ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(ம)

## மன்னாரிலும் இன்று பேரணி

மன்னார்,ஒக்.8

சிறைகளில் உண்ணாவிரதமிருக் கும் தமிழ்க் கைதிகளின் போராட் டத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று மன்னாரிலும் எழுச்சிப் பேரணி நடை பெறவிருக்கின்றது.

தமிழ் தேசிய எழுச்சிப் பேரவை இந்த வெகுஜனப் போராட்டத்துக் கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்தப் பேரணியில் பங்குபற்று வதற்காக இன்று காலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு அரங் கில் கூடுமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் பங்குபற்றினர்.

மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த - பெரும்பான்மை இனத்தின் - பிரமுகர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற் றைய சில முக்கிய முடிவுகள் வரு மாறு:-

★ தமிழ்க்கைதிகளின் விடுத லையை வற்புறுத்தி எதிர்வரும் 11 ஆம் திகதி - வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கில் முழுஅளவில் ஹர்த்தால் நடத்துவது

★ அன்றைய தினம் கொழும்பி லும் வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்துவது;

★ நாளை வடக்கு-கிழக்கின் பல்வேறு மாவட்டச் செயலகங்கள் முன்பாகவும் கைதிகளின் விடுதலையை வற்புறுத்தி அடையாள எதிர்ப்பு நட வடிக்கைகளில் ஈடுபடுவது.

★ தமிழ்க் கைதிகளின் விடுத லைக்கு விரைந்து உரிய நடவடிக் கைகளை அரசு எடுப்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சகல நட வடிக்கைகளையும் பின்பற்றுவது.

★ இன்று நாடாளுமன்றத்தில் ஆகக் குறைந்தது இந்த விடயம் தொடர்பாக விசேட கவனயீர்ப்புப் பிரே ரணை ஒன்றையாவது கொண்டுவர முயற்சி செய்வது

## மணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீன் முன் ஆஜர் செய்தனர்.

12 ஆகதிகளையும் விடுதலை செய்த, நீதிவான், இவர்களை உடன டியாக மீளக்குடியமர்த்தும் நடவடிக் கைகளை மேற்கொள்ளும்படி மன் னார் செயலக அதிகாரிகளுக்கு உத் தரவு பிறப்பித்தார். (ம)

## யாழ்.அரச அதிபராக நேற்று பத்மநாதன் பதவியேற்பு!

யாழ். மாவட்ட அரச அதிபராக செ.பத்மநாதன் நேற்றுக்காலை 9.50 மணிக்கு, சுபநேரத்தில் பதவி ஏற்றார். பதவியேற்பை அடுத்து செயலக உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் கிளை ரீதியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார். நவீன உலகின் சவாலுக்கு முகம்கொடுக்கும் வகை யில் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அதற்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்துதருவதாகவும் - அரச அதிபர் அவர்களிடம் தெரிவித்தார்.(ம-3-10)

## ஆயுதக் களஞ்சியத்தில் நேற்று வெடிவிபத்து!

திருகோணமலைப் பகுதியிலுள்ள முள்ளிப்பொத்தானை இராணுவ முகாமில் நேற்று முற்பகல் வெடிவிபத்து ஒன்று ஏற்பட்டது. முகாமின் ஆயுதக்களஞ்சியத்திலேயே இந்த வெடிவிபத்து நிகழ்ந்ததாக அறியப் படுகிறது. ஆயுதக்களஞ்சியத்தை ஓர் அதிகாரி சோத னையிடுகையில் ஒரு கிரனேட் தவறுதலாக வெடித்ததா லேயே இவ்விபத்து நிகழ்ந்திருப் பதாக இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் அந்த அதிகாரி காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு கூடும். நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி 2003ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு களை இன்று சபையில் சமர்ப்பிப்பார்.

18ஆவது, 19ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா இன்று சபையில் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)


## பாதுகாப்பு ஊழியர் வெற்றிடங்கள்

கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் அலுவலகங்களைக் கொண்ட நிறுவனம் ஒன்றுக்கு

பாதுகாப்பு ஊழியர் வெற்றிடங்கள் உள்ளன.

பிரஸ்தாப மூன்று இடங்களிலும் தேவையேற்படின் பணியாற்றக் கூடியவராகவும் வாகனப்போக்குவரத்துக்கு வழித்துணை வழங்கக் கூடியவராகவும் இருக்கவேண்டும்.

★ சிங்கள மொழியில் பேசக்கூடிய வல்லமை சிறப்புத்தகுதியாகும்.

★ வாகனச் சான்றிதழ் வைத்திருப்பதும் சிறப்புத் தகுதியாகும்.

சம்பளம் அனுபவத்திற்கு ஏற்ப பேசித் தீர்மானிக்கலாம்.

கொழும்பு, திருகோணமலையில் தங்குமிடவசதியும் உணவு வசதி யும் செய்யப்படும்.

*தகுதியானவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு உடன் விண்ணப்பிக்கவும்.*

விள.இல.1666

மே/பா உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/24127)

மீண்டும்

**LIONAIR** விமானசேவை

யாழ்ப்பாணம் — கொழும்பு

ஒருவழிக் கட்டணமாக

ரூபா 1999/=

பதிவுக் கட்டணம் ரூபா 100 மட்டும்

சரந்தி கபே

278, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம். T.P. 021-222-3553

(8994)


## A SERVICE OF REMEMBRANCE

on the Fifth Death Anniversary of the

**Rt.Rev.Dr.D.J.Ambalavanar**

will be held on Thursday

the 10th October at Uduvil Church

at 4.p.m. (S.L.T)

**Dr.Mrs. C.Ambalavanar.**

(9101)


ஈசன்

கல்வி நிலையம்

பௌதிகவியல்

A/L 2003, 2004

கதிர்ப்பு

திரு.குமரன்(B.Sc.)

புதன், வியாழன் 3.30p.m.

ஆரம்பம் :- 09.10.02 (புதன்) 3.30p.m.

(9163)

# English Academy

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. :- 021-2222588(home) 077-174512(hand)

E.mail :- thangan672002@yahoo. com.

கடந்த 6 வருடங்களாக ஆங்கிலம் கற்பிக்கும் கலையின் காரணமாக முல்லை வாழ் மக்களின் மனங்களை வென்ற எமது கல்விச்சாலை தற்போது ஒருமாத காலத்தில் யாழ் நகர் வாழ் மக்களது மனங்களையும்.....?

அநேகரது வேண்டுகோளுக்கிணங்க புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான 10 மாதகால விசேட கற்கை நெறியில் 2001இல் சித்தியெய்தியோரும் சேர்த்துக் கொள்ளப் படுவதுடன் கட்டணத்தை இரு தடவைகளில் செலுத்தவும் அனுமதிக கப்படும் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த நாம் மிகவும் மகிழ்வூட்டப்படுகிறோம்.

*Sat. and Sun. 9 a.m.*

பல்கலை உட்பட எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் சுருக்க மாகவும் விளக்கமாகவும் இலக்கணம் கற்பிக்கப்படும். இதைப் பூர்த்திசெய்து அதற்கான பரீட்சையில் சித்தியடைவோர் மட் டுமே எமது ஏனைய கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

| Grammar 1000/= மட்டுமே | ஏனைய பாடநெறிகள் |
|---|---|
| Basic Grammar - 07 hours | ★ Text Books |
| Tenses - 25 hours | ★ Telling Stories |
| Auxiliary Verbs -12-hours | ★ Writing Letters |
| Clauses -10 hours | ★ Writing Essays |
| Conjunction -10 hours | ★ Cursive Writing |
| Direct & Indirect -08 hours | ★ Spoken |
| | ★ Past Papers |

*தகவல்:*

*K.T.Rajah (S.S)*

Come and See or Send and See (9161)


## மரண அறிவித்தல்

### கந்தையா இராசேந்திரம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், சூளானை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசேந் திரம் நேற்று (07.10.2002) திங்கட்கிழமை அகால மரணமானார். அன்னார் திருமதி சரஸ்வதி - இராசேந்திரம் அவர்களின் அன்புக் கணவரும் திருமதி சாந்தா கந்தசாமி (கனடா), திருமதி ஜமுனா புஸ்பகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார். அன்னாரின் பூத வுடல் இன்று (08.10.2002) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் சூளானை, சுன்னாகம்.* (9193)

தகவல்: மனைவி

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.